மில்க் வைற்
நீல சோப்
★ பட்டு
★ பருத்தி
★ நைலோன்
துணிகளை
பிரகாசமாக சலவை செய்கிறது



Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

# ஈழநாடு வாரமலர்

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 இதழ் 200

பராபவ ஆவணி 14 ஐ:அவ் 13 (30-8-66) செவ்வாய்க்கிழமை



பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.


# அரசாங்க மொழியாக தமிழ் ஏற்கப்பட்டுள்ளது

## மாவட்ட சபை மூலம் கலை, கலாசாரம் வளரும்'

### உள்ளூராட்சி அமைச்சர் திருச்செல்வம் நம்பிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

முந்நூற்று ஐம்பது ஆண்டுகளின்பின் எமது தாய்மொழியும் அரசாங்க மொழியாக இருக்க அனுமதி பெற்றிருக்கிறோம். எமது மொழி, கலை, கலாச்சாரம் வளர்ப்பதற்கு மாவட்டசபை போதியளவிற்கு உதவும் என நம்புகின்றோம்.

இவ்வாறு ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் யாழ். பிரதேச கலை விழாவில் நேற்று பிரதம விருந்தினராகக் கலந்து பேசும்பொழுது குறிப்பிட்டார். இவ்விழாவிற்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா தலைமைதாங்கினார்.

திரு. எம். திருச்செல்வம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இந்தியசுதந்திரப்போராட்டத்தின்பொழுது கலையும் இலக்கியமும்வளர்ச்சியடையக்கூடியதாகவிருந்தது. ஆனல் துரதிருஷ்டவசமாக யாழ். பிரதேசகலாமன்றத்தின் ஆரம்பகாலமான 1958-ம் ஆண்டிலெமதுபிரச்னைகள் காரணமாக, கலை. இலக்கியவளர்ச்சிக்கு இடமில்லாதிருந்தது.

தமிழ் அரசர்கள் யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கலை கலாச்சாரத்தைப் பாதுகாத்து அதை வளர்ப்பதற்குத் தூண்டுதலாகவிருந்தனர்.

எமது கல்வி கலாச்சார மந்திரி தமிழ் கலை-கலாச்சாரம்பற்றி ஞாபகத்தில்வைத்திருப்பதாகத் தெரியவில்லை. தேசிய அரசாங்கம் நிரந்தரமாகவிருக்குமா என்பதுபற்றியும் எமக்குத்தெரியாது. ஆனல் மாவட்டசபை மூலமே எமது கலை கலாச்சாரத்தை வளர்க்கமுடியுமென்பதுஎனது நம்பிக்கை. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் எமது கலையை வளர்ப்பதற்குத் தொண்டுசெய்து வருவதுபற்றிமிக்கமகிழ்ச்சி.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா பேசும்பொழுது யாழ்ப்பாணத்தில் கலை கலாச்சாரம் எவ்வித வளர்ச்சியடைந்துள்ளது என்பதை தென்பகுதி மக்களும்காணக்கூடியதாக இருக்கவேண்டுமென்றும் அடுத்த ஆண்டு கலைவிழாவில்அவர்கள் பங்குபற்றுவார்களெனத் தாம் நம்புவதாகவும் கூறினர்.

## ஒரே ஒருவரினல்...

டமாஸ்கார், ஆக. 29

ஈராக்கில் காலரா நோய் பரவியதற்குரிய காரணத்தை இங்குவந்துள்ள உலக சுகாதார ஸ்தாபன அதிகாரி ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

ஒரு பாகிஸ்தானிய சட்ட விரோதக் கடத்தல்காரரினல் தான் இந்த நோய் ஈராக்கில் பரவியதென்றும் இவர் ஆப்கானிஸ்தானிலிருந்து ஈராக்குக்கு வந்திருந்தாரென்றும் இந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## கொப்பரா ஆலையில் தீப்பற்றியது!

கொழும்பு, திங்கள்

கொழும்பிலிருந்து சுமார் 50 மைலுக்கு அப்பாலுள்ள சிலாபத்துக்கு அருகாமையிலுள்ள காக்காப்பள்ளி எனுமிடத்தில் ஒரு கொப்பரா ஆலையில் இன்று இரவு தீப்பிடித்துக்கொண்டதால் இந்த ஆலை பெரும் சேதத்துக்குள்ளானது. இத்தீயை அணைப்பதற்காக கொழும்பிலிருந்து தீ அணைப்புப் படையினர் விரைந்து சென்றனர்.

## வவுனியாவெங்காயம் என்று அழையுங்கள்'

### பம்பாய் வெங்காயத்துக்கு மந்திரி பிலிப்பின் புதிய பெயர்

வவுனியா, திங்கள்

கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இன்று மாலை வவுனியா அபிவிருத்திப்பொருட்காட்சியில் வவுனியாவில் விளைவிக்கப்பட்டு, பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தபம்பாய்வெங்காயத்தைப் பார்த்துப்பூரித்துப்போய், 'இனி பம்பாய் வெங்காயம் என்று இதைச் சொல்லாதீர்கள். வவுனியா வெங்காயம்என்று சொல்லுங்கள்' என்று கூறினர்.

மந்திரி பிலிப் குணவர்த்தன இன்று மாலை வவுனியா பொருட்காட்சியைத் திறந்து வைத்துப்பேசினர்.

அவர் பேசுகையில், இந்த நாட்டின் பொருளாதார உற்பத்தியைப் பெருக்குவதில் சகல இன மக்களும் இன, மத, பேதமின்றி உழைக்க வேண்டுமென்று சொன்னர்.

வெளிநாட்டுக்கு நமது உற்பத்தியை அனுப்புவதற்கு ஏற்றமுறையில் செயலாற்றவேண்டுமென்றும் கூறினர்.

## கூட்டாட்சி வாதிகளுக்கு குமாஸ்தா சங்கத் தலைமை

கொழும்பு, செவ்வாய்

நேற்று நடைபெற்ற அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்க வருடாந்த மகாநாட்டில் உத்தியோகத்தர்கள் தெரிவில் கூட்டரசாங்க கட்சிகள் சார்பான அங்கத்தவர்கள் முக்கிய பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவராக ஐ. ஜே. விக்கிரமாவும் (ஜனவரி 8-ம் திகதி வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டது காரணமாக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்) உபதலைவர்களாக திரு. எஸ். பாலசிங்கம், திரு. எம். எம். ஏ. ஐ. பெரேனண்டோவும் காரியதரிசியாக திரு. கே. எம். கருணரத்னவும் உப காரியதரிசியாக திரு. ஏ. ஆர். எச். அலுவத்தயும் பொருளாளராக திரு. பி. ஏ. வணசிங்காவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பன்னிரண்டு பேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

மகாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் அங்கத்தவர்கள் சிலர் பேச எழுந்தபோது மற்றவர்கள் கூக்குரலிட்டும் கூச்சலிட்டும் அவர்களைப் பேசவிடாது தடுத்தார்கள். சென்ற ஜனவரி 8-ம் திகதி தமிழ்மொழி விசேஷ மசோதா [illegible] பட்டபோது வேலைநிறுத்தம் [illegible]

(12 ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் மாவுக்கு தட்டுப்பாடு இல்லை

### 8 மாதத்துக்குத் தேவையான மாவு கையிருப்பில் உண்டு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்தில் மாவு தட்டுப்பாட்டுக்குஇடமில்லை என்றும் அடுத்த 8 மாதங்களுக்குப்போதுமானமாவுஇப்பொழுது கையிருப்பில்இருக்கிறது என்றும் உதவி உணவு கட்டுப்பாட்டு அதிகாரி திரு. தே. சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

மூன்று மாதங்களுக்குப் போதுமான அரிசியும் கையிருப்பில் உண்டுஎன்றும்இந்த அதிகாரி கூறினர்.

இதற்கிடையே "ஜமடு" என்ற அரிசிக் கப்பல் ஒன்று அடுத்த இரண்டு தினங்களுக்குள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வரவிருக்கிறது. நேரடியாக காங்கேசன்துறை துறைமுகம் வரும் இக்கப்பலில் 8,400 தொன் கம்போடிய அரிசி உள்ளது. இறக்குமதி வேலைகள் கப்பல் வந்த அடுத்த தினமே ஆரம்பமாகுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் கூறினர்.

## பார்லிமெண்டில்கல்வி வெள்ளை அறிக்கை

கொழும்பு, திங்கள்

வரவு-செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு முடிவடைந்ததும், கல்விபற்றிய வெள்ளை அறிக்கை கல்விமந்திரி திரு. இரியகொல்லை பார்லிமெண்ட்சபையில் சமர்ப்பிப்பார்.

இந்த வெள்ளை அறிக்கையிலுள்ள திட்டங்களை சபை அங்கத்தவர்கள் பரிசீலனை செய்யப் போதிய அவகாசம் கிடைத்த பின்னர், பொது, தொழில்நுட்பக் கல்வி மசோதா சபையில் சமர்ப்பிக்கப்படும். உத்தேச திட்டங்கள்பற்றிய விளக்கக் குறிப்புகளும் வெள்ளை அறிக்கையில் இருக்கும்.

பொது, தொழில்நுட்பக் கல்வி மசோதாவின் பின்வரும் முக்கிய அம்சங்கள் இடம்பெறும்: முதலாம் படிவத்திலிருந்து படிப்படியாகப் பள்ளிக்கூடங்களில் ஆங்கில மூலத்தை நீக்குவது, பள்ளிக்கூடங்களை கலை, விவசாய, நடைமுறை, தொழில்நுட்ப, மீன்பிடிப் பள்ளி[illegible]

(12-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் வங்கியின் புதிய மனேஜர்

கொழும்பு, திங்கள்

மக்கள்வங்கியின் ஜெனரல் [illegible] திரு. [illegible] கன்னங்கராவை நியமிப்பதென மக்கள் வங்கியின் நிர்வாகச் சபையினர் நேற்றுத் தீர்மானித்தனர்.

திரு. டபிள்யூ. சொலமன்ஸின் பதவிக்காலம்முடிவுற்றதன் பயனகவே மேற்படி பதவி காலியாயிற்று.

திரு. சொலமன்ஸின் பதவிக்காலம், மக்கள் வங்கி கொமிஷனின் அறிக்கை வெளியாகியதும், முடிவுற்றது. திரு. கன்னங்கரா முன்னுள் உதவி ஜெனரல் மனேஜர் பதவி வகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரசாரம் — அரசியல் நிருபர்

# நாகநாதன் திடீர் புரட்சி!



## தொண்டமான் எச்சரிக்கை நிலைமையை மாற்றுமா?

### ராஜாங்க அமைச்சரின் ராஜதந்திரம்

"நாட்டின் எந்தப்பகுதிக்குச் செல்லவும் எனக்கு உரிமை இருக்கிறது. அதே போல் என்னை அழைக்கவும் உங்களுக்கு உரிமை இருக்கிறது" இப்படி உரிமைகளைப் பற்றியும் தனக்கும் தமிழினத்துக்குமுள்ள உறவுபற்றியும் பேசிவிட்டு, யாழ்ப்பாண மக்களின் அன்பைப் பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணப்பகுதியில் இரண்டு தினங்கள் தங்கியபின் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கொழும்புக்குச் சென்றார். முன்னைய மந்திரிகளைப் போலும் இன்றைய மந்திரிகள் சிலரைப் போலும் அவர் வாக்குறுதிகள் எதையும் அள்ளிவீசவில்லை. "வாக்குறுதிகள் கொடுக்கமாட்டோம். கொடுத்த வாக்குறுதிகளை மீறமாட்டோம்" என்று கச்சிதமாகத் தெரிவித்துவிட்டார். பரந்தனில் அமைக்கப்படவிருக்கும் வானொலி ஒலிபரப்பு அலைநிலையக் கட்டடத்துக்கு அத்திபாரக் கல் நாட்டியபொழுது கூட வானொலி ஒலிபரப்பு நிலையம் அநேகமாக இரண்டுவருடங்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டுவிடுமென அரைகுறைநம்பிக்கைதான் தெரிவித்தார். உடனடியாகக் கட்டிமுடித்துத் தருவோம்" என்றுகூட வாக்குறுதியளிக்கவில்லை. பிரதமருக்கு அடுத்தபடியாக பொறுப்புவாய்ந்த பதவி வகிப்பவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன. அரசாங்கத்தின் மூளை என்றுகூடச் சொல்லலாம். பிரதமரைப்போலவே நிதானம் தவறாமல் பேசி இப்பகுதி நிலைமையை நன்கறிந்து சென்றிருக்கிறார். அவரது விஜயம் இப்பகுதியின் முன்னேற்றத்துக்கு உபயோகமாகவும் உதவியாகவும் இருக்கவேண்டும்.



#### பிரதமர் லண்டன் போகமாட்டார்

அடுத்தமாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக 2-ந் திகதி லண்டன் செல்வதற்கு பிரதமர் திரு. டட்லி சேனநாயகா திட்டமிட்டிருந்தார். ஆனால் இதைக் கைவிட்டுவிட்டார். அவருக்குப்பதிலாக சென்ற வருடம்போல் இம்முறையும் நீதிஅமைச்சர் திரு. விஜயமானே கலந்துகொள்வார். இங்கு பல முக்கிய வேலைகளிருந்ததால் சென்ற முறை பிரதமர் காமன்வெல்த் மகாநாட்டுக்குச் செல்லமுடியாது போயிற்று. இப்பொழுதும் இங்கு அவருக்குப் பலவேலைகள்உண்டு. நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. ஐ. நா. நிபுணர் இங்கு விரைவில் வரவிருக்கிறார். இந்தவேலைகளைக் கவனிக்க வேண்டியிருப்பதுடன் இடதுசாரிக் கட்சியினர் வேலைநிறுத்தப் பயமுறுத்தலும் பிரதமர் தமது லண்டன்பயணத்தை ஒத்தி வைப்பதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.


ஆனால் பிரதமர் லண்டன் பயணத்தை கைவிட்டதற்கு 'ஜனதின' என்ற இடதுசாரிப் பத்திரிகை என்ன காரணம் கூறுகிறது தெரியுமா? "பிரதமர் வெளிநாட்டில் இருக்கும் சமயத்தில் அவருக்குப் பதிலாக யார் கடமையாற்றுவது என்ற பிரச்னைதான் அவர், லண்டன் பயணத்தைக் கைவிடக் காரணம். செப்டம்பர் மாதம் 2-ந் திகதி முற்பகல் 10-30 க்கு பிரதமர் புறப்படவிருந்தார். அவரை வழியனுப்புவதற்கான வைபவத்துக்கு அழைப்பிதழ்களும் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆனால் ஜே. ஆர். ஜயவர்த்தனவா, சி. பி. டி. சில்வாவா, எம். டி. பண்டாவா அவர் இங்கு இல்லாத சமயத்தில் கடமையாற்றுவதென்பதில் ஒரு முடிவுக்கு வரமுடியாததால் பிரதமர் தமது பயணத்தைக் கைவிட்டார்" என்று 'ஜனதின' கூறுகிறது.

பிரதமர் அமெரிக்காவுக்கும் லண்டனுக்கும் சென்று ஒரு மாதத்துக்குமேல் தங்கியிருந்தபொழுது திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனதான் பிரதமரின் கடமைகளைக் கவனித்தார் என்பதையும் உதவிப் பிரதமர் என்ற ஸ்தானத்துக்கு ஒப்பான பதவியில் திரு. ஜே. ஆர். இருக்கிறார் என்பதையும் இந்த 'ஜனதின' மறந்துவிட்டது.

'ஜனதின' பத்திரிகையின் நிர்வாக அதிபர் யார் தெரியுமா? முன்னாள் நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின தான். 'ஜனதின' ஆசிரிய தலையங்கத்தைப் பெரும்பாலும் இலங்கரத்தினவே எழுதுகிறார்.

#### சி. பி. டிக்கு தூதுவர் பதவி

காணிக் கொள்கை சென்ற பத்துவருட காலமாக அதிருப்தியான நிலையிலேயே இருப்பதால் காணி அமைச்சர் சி. பி. டி சில்வாவுக்கு ஆளும் கட்சிக்குள்ளும் எதிர்ப்புத் தோன்றியிருப்பதாகவும் எதிர்க்கட்சியினரின் எதிர்ப்புடன் சமஷ்டிக் கட்சியினரின் எதிர்ப்பும் சேர்ந்துள்ளதால் நிலைமையைச் சமாளிக்க வேறு மந்திரி பதவி அளிக்க அல்லது லண்டனில் இலங்கை ஹைகமிஷனராக நியமிக்க பிரதமர் உத்தேசித்துள்ளாராம். இந்தச் செய்தியையும் 'ஜனதின' பத்திரிகைதான் வெளியிட்டுள்ளது. [illegible] சில்வாவின் காணிக் கொள்[illegible] ராஜாங்க அமைச்சரும் எதிர்க்கிறாராம். சி. பி. டி. சில்வாவின் மந்திரி பதவி பற்றிய முடிவு அடுத்த மாதம் மந்திரிசபை மாற்றி அமைக்கப்படும் பொழுது தெரியவரும் என்றும் 'ஜனதின' கூறுகிறது. மந்திரிசபை அடுத்த மாதம் மாற்றியமைக்கப்படும் என்று 'ஜனதின' கூறுவதன் அர்த்தம் என்ன? 'அடுத்த மாதம் புரட்சி ஏற்பட்டு



அரசாங்கம் கவிழும் என்று யாரோ ஒரு சோதிடர் கூறியதாக ஆர். ஜி. சேனநாயகா ஒரு கூட்டத்தில் கூறினாராமே. அதை வைத்துத்தான் 'ஜனதின' இச் செய்தியை வெளியிட்டுள்ளதா?

#### தொண்டமான் எச்சரிக்கை

வம்சாவளிப் பிரசைகளுக்கும் பதிவுப் பிரஜைகளுக்கும் இடையில் தொடர்ந்தும் இலங்கை பாகுபாடு காட்டினால் இப்பிரச்னையை ஜெனிவாவிலுள்ள சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்துக்கு எடுத்துச் சொல்லப்போவதாக நியமன எம். பி. யும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு. எஸ். தொண்டமான் நேற்று முன்தினம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் எச்சரிக்கை விடுத்தார். இலங்கை வம்சாவளிப் பிரஜைகளுக்கும் பதிவுப் பிரஜைகளுக்குமிடையில் பல விஷயங்களில் பாகுபாடு காட்டப்படுகிறது. முக்கியமாக உடையில் அதாவது அவுளி வழங்குவதிலும் பாகுபாடு காட்டப்படுறது. இவ்வித பாகுபாடு தொடர்ந்தும் காட்டப்படுமானால் முதலில் இப்பிரச்னையை பிரதமருக்கு எடுத்துக் கூறுவேன். இலங்கை அரசாங்கம் இக்குறையைத் தீர்க்கத்தவறினால் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் இது பற்றி முறையிடுவேன்" என்று திரு. தொண்டமான் கூறியிருக்கிறார்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் ஜெனிவாவிலுள்ளது. உலகநாடுகள் பலவும் இதில் அங்கம் வகிக்கின்றன. ஐ. நா. மனிதஉரிமைச் சாஸனத்தை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்களுக்கான விதிமுறைகளை இந்த ஸ்தாபனம் வகுக்கின்றது. இதை அங்கத்துவ நாடுகள் அனைத்தும் அங்கீகரிக்கின்றன. அங்கீகரித்த பின்னர் அவற்றுக்கு மாறான முறையில் அங்கத்துவ நாடுகள் ஏதாவது நடந்துகொண்டால் அதைப்பற்றிஸ்தாபன மகாநாட்டில் புகார் செய்யப்படும்போது, குறிப்பிட்ட நாடு இதர நாடுகளின் மத்தியில் அவமானப்பட நேரிடும். அவமானம் தாங்காது தென்னாபிரிக்கா போன்று வெளியேறவும் கூடும். இதற்காக தமது தவறுகளை அந்த நாடுகள் திருத்திக்கொள்ளவும் கூடும். திரு. தொண்டமான் இலங்கையிலுள்ள மிகப்பெரிய தொழிசங்கத்தின் தலைவர். இதனால் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன நிர்வாக சபையின் அங்கத்தவராகவும் இருக்கிறார். அங்கு இப்பிரச்னையை அவர் சுலபமாகக் கிளப்பலாம்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் இப்பிரச்னை பற்றிக் கிளப்பினாலும் கிளப்பாவிட்டாலும் இலங்கை, வம்சாவழிப் பிரஜைகளுக்கும் பதிவுப் பிரஜைகளுக்குமிடையில் தொடர்ந்து பாகுபாடு காட்டி வருவது நியாயமல்ல. ஸ்றிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை சாக்காக வைத்து பதிவுப்பிரஜைகளுக்கு தனி வாக்காளர் ஜாபிதா தயாரிக்க முன்னைய அரசாங்கம் முனைந்தது. ஆனால் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அந்த யோசனை கைவிடப்பட்டது. எனினும் உணவுப் பண்டங்களின் பதுக்கலைத்தடுக்கஎடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது பதிவுப் பிரஜைகள் மீது குறிப்பிட்டு பழிவாங்கப்பட்டது. அவர்கள் வேண்டாத ஓர் இனமாக புதிய வகுப்பு வாதமும் கிளப்ப முயற்சிசெய்யப்பட்டது. இந்நாட்டில் வாழும் அனைவரும் ஐக்கியமாக வாழவேண்டுமென உண்மையிலேயே விரும்பினால் பதிவுப்பிரஜைகளை ஒதுக்கிவைத்து பாகுபாடு காட்டும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இலங்கைப் பிரஜைகளாக பதிவு செய்துகொண்டபின் அவர்கள் இலங்கைப் பிரஜைகள் தான் என்பது இலங்கையரும் மறக்கக் கூடாது. பதிவு செய்து கொண்டவர்களும் மறந்துவிடக்கூடாது.

#### நாகநாதன் 'புரட்சி'

நல்லூர் எம். பி.யும் தமிழரசுக்கட்சித் தலைவருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் ஜனப்பிரதிநிதிகள் சபையில் திடீர்ப் புரட்சி செய்து அரசாங்கக் கட்சியினரையும் தமிழரசுக்கட்சியினரையும் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியிருக்கிறார். உயர்கல்வி மசோதா சென்ற சனிக்கிழமை இரவு ஜனப்பிரதிநிதிகள் சபையில் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது. இம்

(12-ம் பக்கம் பார்க்க)

கொண்டாட்டங்களுக்கு வேண்டிய
பிள்ளைகளின் தைத்த உடுப்புகள்
★ நைபிலேன் கவுன்
★ ரிஸ்யு கவுன்
★ கொட்டன் கவுன்
★ சன் சூட்ஸ்
★ பேபி சூட்ஸ்
★ போய் சூட்ஸ்
இன்னும் பல கண்கவர் டிசைன்களிலும்
பெற்றுக் கொள்ளலாம்
ரோலரூம்ஸ்
46, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிக்க வந்தபின் குறிப்பிட்ட பாத்திரத்தில்மட்டும்தான் நடிப்பேன் என்று சொல்லலாமா ?

## எந்தப் பாத்திரமானலும் நடிக்கத் தயார் என்கிறுர் கவர்ச்சிக்கன்னிவிஜயா

பேட்டி. இரா. சுந்தரராஜன்

'கற்பகம்', 'இதயக் கமலம்' இரு படங்களுமே எனக்கு மிகவும் பிடித்தவை. இருபடங்களிலும் நான் ஏற்று நடித்த பாத்திரங்கள் எனக்கு மனநிறைவைத் தந்துள்ளன' என்று தென்னகத்திரையுலகின் முன்னணிநடிகை கே. ஆர். விஜயா என்னிடம் சொன்னர்.

தமிழகத்தில் ஓய்வில்லாது நடிக்கும் ஒரே நடிகையான 'கவர்ச்சிக் கன்னி' விஜயா மிகவும் சுறுசுறுப்புடனும் கலகலப்பாகவும் காணப்படுகிருர். இனியஉள்ளம் கொண்டவராக நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மனம்விட்டுப் பதில்சொன்னுர்.

### அரசியல் பிடிக்காது

அரசியல் என்ருல் அது என்னவென்றே எனக்குத் தெரியாது. அதனை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலும்இடையாது. அது எனக்கு பிடிக்காது ஸார்!

எந்தப் பாத்திரமானாலும் அதனை ஏற்று நடிக்கத் தயாராக இருக்கிறேன். நடிக்க என்று வந்தபின் குறிப்பிட்ட பாத்திரங்களில் மட்டும்தான் நடிப்பேன்என்று சொல்லலாமா? அது தவறு. என்னைப் பொறுத்தவரையில் எந்தவகையான கதாபாத்திரங்களையும் ஏற்று நடிக்க முடியும் என்று நம்புகிறேன்.

### மகிழ்விப்பதே லட்சியம்

ரசிகர்களைச் சந்தோஷப்படுத்தி மகிழ்விப்பதே எனது இலட்சியம். படம் பார்க்கும் ரசிகர்களுக்கு மனநிறைவு ஏற்படுத்தவே விரும்புகிறேன். வாழ்க்கையிற் சந்தோஷமாக இருக்க விரும்புகிறேன்.

### அன்னை உணவே என் உணவு

இந்தியாவின்புகழ்மிக்க நடிகையாக வேண்டும் என்ற கவலைதான் எனது உடலைக் கட்டுக்கோப்புடன் வைத்திருக்கிறது. நான் விசேஷமாக உணவு தயாரித்துச் சப்பிடுவதில்லை. எனது அன்னை பரிமாறும் உணவை உட்கொள்ளுவேன்.

'பத்மஸ்ரீ' பட்டம் பெற்ற நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிப்பின் இலக்கணம் வகுத்தவர். 'மக்கள் திலகம்' எம். ஜி. ஆர். மக்களைத் தம்பால் கவர்ந்துகொண்டுள்ளவர்.

இருவருடனும் சேர்ந்து நடிக்கும்பேறு பெற்றமை குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

### ஈழம் செல்ல அவா

இலங்கை சென்றுதிரும்பியவர்களின் வரவேற்புக்கதைக் கேட்க இலங்கை செல்லவேண்டும் என்ற அவா வலுவடைந்து வருகிறது. ஓய்வு கிடைத்தால் இலங்கை வந்து இலங்கை ரசிகர்களைச் சந்தித்து மகிழ்வேன். பெரும்பாலும் இவ்வருடத்துக்குள் எனது இலங்கை விஜயம் அமையும் என எதிர்பார்க்கிறேன்.

### கவலை இதுதான்!

படப்பிடிப்புக்களுக்காக வெளியூர் செல்லும்போது தமதுபொருட்கள் திருட்டுப் போவதனுல் இவர் பெரிதும் கவலையடைகிருர்.

இலங்கை ரசிகர்களுக்கு தமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்ட விஜயா சுமார் ஒன்றரை மணி நேரம் தமிழ்சினிமா உலகில் பல விஷயங்களைப் பற்றி எல்லாம் மனம் விட்டு என்னிடம் கூறினுர். சமயம்வரும்போது எழுதுகிறேன்!



கவர்ச்சிப்பார்வை கே. ஆர். விஜயா இப்படி எதற்காகத்தான் ஏங்குகிருரோ? 'ராமு'வைத் தான் கேட்கவேண்டும்.

'மேகலா' அலசுகிருர்:

## நடிகர் ஜெய்சங்கர் எம்.ஜி.ஆர்.ஆகிருர்!

சமீபத்தில் தமிழக தமிழரசுக்கழகத் தலைவர் ம. பொ. சி.யுடன் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று ஈழத்துக்கு வந்து போன நடிகர் ஜெய்சங்கர் 'மக்கள் திலகம்' எம். ஜி. ஆருக்கு மக்கள் மத்தியிலே இருக்கும் அளவுக்கு மிஞ்சிய செல்வாக்கைப் போன்று தனக்கென்று ஒரு பெரியதொரு கூட்டத்தைத் தனதாக்கிக் கொண்டுவருகிருர்.

'இரவும் பகலும்' என்ற படத்தில் இவரைக் கதாநாயகனுக்கி, தமிழ்திரைப்பட உலகத்துக்குக் கொண்டுவந்தார் டைரக்டர் ஜோசப் தளியத்.

முதல் படத்திலேயே எழுந்து புரண்டு ஓடியாடி உதையும் குத்தும் கொடுக்கும் கதாநாயகனுனர்! வேறு எந்தப் புதுமுகங்களுக்கும் இல்லாத ஒரு கவர்ச்சி அந்தப் படத்தில் இவருக்கிருந்தது. இதனைத் தொடர்ந்து தமிழ் படவுலகில் பல படங்களில் நடிக்கக்கூடிய சந்தர்ப்பம் இவருக்குக் கிடைத்தது.

இன்று 'புரட்சி நடிகர்' எம். ஜி. ஆருக்கு எந்த நடிகருக்குமில்லாத செல்வாக்கும் புகழும் இருக்கிறதென்ருல் அதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. ஒன்று- அவர் நடிக்கும் எந்தப் படங்களிலும் அடியும் குத்தும் கொடுத்து, கதாநாயகியுடன் ஆடி 'டுயட்' பாடிக்கும்மாளம் அடிப்பது. மற்றது அவர் தி. மு. க. விலிருப்பது.

முன்னதை ஜெய்சங்கரும் பின்பற்றுகிருர். இதனுல் எம். ஜி. ஆர். போன்று இவருக்கும் கூட்டம் வட்டமிடத் தொடங்கியுள்ளது. பின்னர் ஏதாவது கட்சியுடனும் அவர் ஒட்டிக்கொண்டுவிட்டால் அவர் செல்வாக்குப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

அத்துடன் 'மக்கள் திலகம்' இன்னும் அவ்வளவு நீண்டகாலத்துக்கு திரையுலகில் இருப்பார் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. வயதாகிவிட்டது தான் அதற்குக் காரணம்!



"ஆளை ஆளைப் பார்த்து முறைப்பதேனே?"
ஆர். ஆர். பிக்சர்ஸ் 14வது தயாரிப்பான வண்ணப் படத்தில் புரட்சி நடிகரும். கன்னடத்து பைங்கிளியும் தோன்றும் ஒரு கட்டம்.

## கலைக்கதம்ப விழா

துணுக்காய்ப் பகுதி, வவுனிக்குளப் பகுதி அரசாங்க உத்தியோகத்தர்களின் முயற்சியால் ஒழுங்கு செய்யப்பட்ட கலைக்கதம்பவிழா துணுக்காய் விளையாட்டுத் திடலில் சிறப்பாகநடைபெற்றது.

விழாவுக்குத் தலைமை தாங்கி உரைநிகழ்த்திய துணுக்காய்ப் பகுதிக்காரியாதிகாரி திரு. மா. இராசரத்தினம் கலைக் கதம்ப விழாக்கள் மக்களுக்குக்கலை உணர்வை ஊக்குவிக்கப் பயன்படுமென்ருர்.

துணுக்காய்ப் பகுதியிலுள்ள பாடசாலைகள் விழாவில் கலந்துகொண்டு பல நிகழ்ச்சிகளை நடத்தின. பாடசாலை மணவர்களின் நாடகங்களான 'வீரபாண்டிய கட்டபொம்மன்', 'சாம்ராட் அசோகன்' ஆகியநாடகங்களும் நயினை மணிபல்லவ நாடக மன்றத்தாரின் 'தென்காசிச்சப்பன்' என்ற நவீனகதாப்பிரசங்கமும் 'சறுக்கிய சம்பந்தம்' என்ற நகைச்சுவை நாடகமும்சிறப்பாகவிருந்தன. துணுக்காய்ப்பகுதி [illegible] 'காதலன் தந்த கனவு' என்ற சமூக நாடகமும் மேடையேற்றப்பட்டது.

விழாவின் ஆரம்பத்தில் விழாக்காரியதரிசி திரு. அந்தோனிப்பிள்ளை எல்லோரையும் வரவேற்று உரைநிகழ்த்தினுர். திரு. ஐ. திருநாவுக்கரசு நன்றி கூறினுர்.

## அடுத்த இதழில்

○ சென்னை சென்று வந்த நமது சிறப்புநிருபர் இரா. சுந்தரராஜன் நடிகர் ஜெயசங்கரிடம் உங்களை அழைத்துச் செல்கிருர். படங்களுடன் அவர் பற்றிய பல தகவல்கள்...

○ இவ் வாரத்தில் 'மேகலா' எழுதுவதாகவிருந்த ஹாலிவூட்டின் 'காதல் மன்னன்' மார்சலோ மஸ்டிராயனி பற்றிய சுவையான கட்டுரையைப் படித்து மகிழப் போகிறீர்கள்!

○ இன்னும் பல சுவையான சினிமாச்செய்திகள் படங்களுடன் வெளிவரும்... படிக்கத்தவறிவிட்டுபின் கவலைகொள்ளாதீர்!

## கலை அரங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மேடை

"யதார்த்தன்"

நவசீனாவில் நடப்பதென்ன? இக்கேள்வி இன்று உலகநாடுகள் பலவற்றிலும் எழுந்துள்ளன.

'கலாச்சாரப் புரட்சி' ஆரம்பித்துள்ளதாக சீனாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. அந்நிய கலாச்சாரங்களை முற்றாக ஒழித்துக்கட்டி சீனக்கலாச்சாரத்தைப் பாதுகாக்க "செங்காவலர் படை" ஒன்று புறப்பட்டிருக்கிறது. இப்படை (சீனாவில் எஞ்சியுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்தவர்களின் பின் னேக்கின் கவனிக் கூடங்களாக மாற்றம் பெற்ற) சுத்தோவிக்க, கிறிஸ்தவதேவாலயங்களையும் பீக்கிங்கிலுள்ள ஒரு மசூதியையும் உள்ளே நுழைந்து சேதப்படுத்தியிருக்கிறது.

ஷேக்ஸ்பியரின் நாடகம் ஒன்றைத்தயாரித்த பீக்கிங் நாடக, பாடகர் ஒருவர்தற்கொலைசெய்து உயிரை மாய்த்துக்கொள்ள வழி வகுத்திருக்கிறது. பீக்கிங் இராணுவத்தின் ஆதரவுடனும் அனுமதியுடனும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்கின்ற மாணவர்கள் ... யின் மதிப்பை உயர்த்துவதாக. இல்லையென்ற அபிப்பிராயம் சீனாவில் அதிகரித்து வருகிறது. சோவியத் யூனியனின் கொள்கை மாற்றத்தை அவர்கள் மறைமுகமாக ஆதரிக்கவும் தொடங்கியுள்ளனர். இதுதான் மா-ஸே-துங் வழிபாடு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதற்கு காரணமென்று கருத இடமுண்டு. சீனாவின் வார்த்தையில் சொன்னால் ரஷ்யாவின் கம்யூனிஸ 'திரிபுவாத' சித்தாந்தத்தை சீனர்களும் பின்பற்றத் தொடங்கிவிடுவார்களோ என்ற அச்சம் சீனத் தலைவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. 'கலாசாரப் புரட்சி' ஆரம்பித்துள்ளதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்,

இந்தக் 'கலாசாரப் புரட்சி' சீனத் தலைவர்களில் களையெடுப்பு நடத்துவதற்கும் ஒரு காரணமாக இருக்குமென்ற அறிகுறிகள் தோன்றுகின்றன. அதாவது தலைவர் மா-ஸே-துங்கின் பின் தலைமைப் பீடத்துக்கு வருவதற்கு இப்பொழுதே போட்டி ஆரம்பமாகிவிட்டது. ஆக 'கலாசாரப் புரட்சி' பலவித நோக்கங்களுடன் தோன்றியிருக்கிறது.

சீனாவின் வெளிநாட்டுக் கொள்கையையும் மாஸேதுங் வழியையும் மீறிச்செல்பவர்களை ஒழித்துக்கட்டுவது; சோவியத் யூனியனின் 'திரிபுவாத' கொள்கையை சீனாவில் தலைதூக்க விடாமல் தடுப்பது. ஏகாதிபத்தியம், முதலாளித்துவம், காலனித்துவம் ஆகியவைகளை விட திரிபுவாதமே சீனாவுக்கு மிகத்தீங்கானது என்பதை உணர்த்தி அதை சீனாவில் கால்வைக்காமல் அழிப்பது, மாஸேதுங்கின் பின் தலைமைப் பதவிக்குள்ள போட்டியை இடந்தெரியாமலாக்குவது ஆகியவைகள் இந்தப் புரட்சியின் நோக்கம் என்று சொல்லலாம்.

இதன் விளைவுதான் இராணுவத் தளபதியின் பதவி நீக்கம். விரைவில் சீன அரசாங்கத்தலைவர் பதவியிலிருந்து லியு-ஷா-சி நீக்கப்படலாமென்றும் செய்திகள் கூறுகின்றன.

## சீன 'கலாசார புரட்சி' என்ன? சுகர்ணோவின் 2 மாத லீவு; யுதாண்டின் பதவி

...ட்டங்கள் நடத்தியிருக்கின்றன. சீனக்கலாசாரத்துக்கு விரோதமானவர்கள் எனக்கருதப்பட்ட பல்கலைக்கழகத் தலைவரை வெளியேஇழுத்து நையப் புடைத்திருக்கிறது. 'திரிபுவாதிகள்' என சீனர்களால் பெயரிக்கப்பட்ட ரஷ்ய ஸ்தானிகராலயத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறது. இன்னும் சீனக் கலாசாரத்தைப் பாதுகாக்க முன்சென்று கொண்டிருக்கிறது.

கலாசாரப் புரட்சியைக் காக்க 'செங்காவலர்' புறப்படுமுன்னரே, பீக்கிங்படைத் தளபதி விலக்கப்பட்டு புதியவர் ஒருவர் தளபதியாகிவிட்டார். புதிய தளபதி சீனத்தலைவர் மாஸேதுங்கின் மதிப்பையும் அன்பையும் பெற்றிருக்கிறார். இதனுல்தான் எந்த ஒரு கம்யூனிஸ்ட் நாட்டிலும் இதுவரை காணுதமுறையில் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மேலாக இராணுவம் காரியங்கள் செய்யத்தொடங்கியுள்ளது.


சென்ற சில மாதங்களாக கம்யூனிஸ்ட் சீனாவில் சீனத் தலைவர் மா-ஸே-துங் 'வழிபாடு' அதிகரித்து வந்துள்ளது. எங்கும் எதிலும் மா-ஸே-துங் எழுதிய நூல்கள் கண்டிப்பாக 'மந்திரம்' ஓதுவதுபோல் ஓதவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

மா-ஸே-துங் சீனாவின் தலைவர். பெரும் புரட்சியாளர். அவருக்கு இப்பொழுது 72 வயது. உடல் நிலையும் குன்றி வருகிறது. அவர் வலிமை குறைந்துவருவதால் சீனர்கள் மா-ஸே-துங் 'வழியை' கைவிட்டுவிடுவார்களோ என்ற அச்சம் சீனத் தலைவர் சிலரின் மனதில் குடிகொண்டுள்ளது. இதற்குக் காரணம் இல்லாமலுமில்லை. சீனு பின்பற்றிவரும் வன்முறைக் கொள்கையும் யுத்தம் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமென்ற சித்தாந்தமும் உலகில் சீனு... தென்றும் கருத இடமுண்டு. சீனாவின் புதிய தளபதி லின்-பியா மாஸேதுங்கின் ஆதரவுடன் பலம் பெற்றுள்ளார். இவர்தான் 'கலாசாரப் புரட்சி'யை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுள்ளார். கலாசாரப் புரட்சிமட்டுமல்ல அதன் போர்வையில் சீன வெளிநாட்டுக் கொள்கைக்கும் தலைமைப் பீடத்துக்கும் தோன்றியுள்ள எதிர்ப்பை ஒழித்துக் கட்டவும் அவர் திட்டமிட்டுள்ளார். ஆறுமாத காலத்துக்கு கல்லூரிகளுக்கு விடுதலை அளித்து மாணவர்களை 'செங்காவலர் படையில்' அவர் சேர்த்துள்ளார்.

### சுகர்ணோவுக்கு 2 மாத லீவு

இந்தோனேஷியாவில் மீண்டும் தோன்றிய மாணவர் கிளர்ச்சி சற்று அடங்கியுள்ளது. இதற்குக்காரணம் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோ இரண்டு மாதலீவில்வெளிநாடுசெல்லவிருப்பதுதான். இந்தோனேஷியாவின் சுதந்திரதினவைபவத்தில் சுகர்ணோ பேசுகையில் மலேசியாவை, இந்தோனேஷியா உடனடியாக அங்கீகரிக்க மாட்டாதென்றும் ஐ நா. வில் மீண்டும் சேரமாட்டாதென்றும் அறிவித்ததைத் தொடர்ந்து மாணவர் மீண்டும் சுகர்ணோவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்செய்தனர். சுகர்ணோ தனது பேச்சுக்கு 48 மணிநேரத்துள் விளக்கம்கூறவேண்டும் என்றும் வற்புறுத்தினர். மாணவரின் கோரிக்கைக்கு இந்தோனேஷிய இராணுவமும் ஆதரவளித்தது. இதன் பயன்தான் சுகர்ணோவுக்கு விடுமுறை கிடைத்தது.

சுகர்ணோவின் நான்கு மனைவியருள் முதல்மனைவியான பதிமாவதிதேவியை ஜனாதிபதி மாளிகைக்குச் செல்லும்படி இந்தோனேஷிய மாதர்செயல்முன்னணி கோரியுள்ளது. பத்துவருடகாலமாக சுகர்ணோவைப் பிரிந்து வாழும் பத்மாவதி தன்னை யாரும் அழைக்கவில்லையென்றும் தாம் அங்கு செல்லத்தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். இதேசமயம் சுகர்ணோவின் நான்காவது மனைவி, சுகர்ணோவை அரசியலிலிருந்து விலகச் செய்து அவரது உயிரைக் காப்பாற்ற பகிரதப்பிரயத்தனம்செய்து கொண்டிருக்கிறார். முதல் மனைவிமீது இந்தோனேஷியர்கள் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்களோ அவ்வளவு மதிப்பு அவரது நான்காவது மனைவி மீதும் வைத்துள்ளனர். இந்தோனேஷியப் பெண்களைப் பொறுத்தவரையில் முதல் மனைவி பத்மாவதி மீதுதான் அனுதாபம் அதிகம்.



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் டாக்டர் பீம் சென் சச்சார், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு விஜயம் செய்தபொழுது வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் அவரை வரவேற்கையில் எடுத்த படம்.

### யுதாண்ட்


ஐ. நா. தலைமைக்காரியதரிசிப் பதவிக்கு யுதாண்ட் மீண்டும்போட்டியிடுவாரா? அவர் போட்டியிடவேண்டிய அவசியமேயில்லை. அவரை ஏகமனதாகத்தெரிவுசெய்ய ஐ. நா.வில்அங்கம் வகிக்கும் நாடுகள் பல தயாராக இருக்கின்றன. ஆனால் தலைமைக் காரியதரிசிப் பதவியில் தொடர்ந்திருக்க யுதாண்ட் தயாரா என்பதே இன்றுள்ள கேள்வி. செப்டம்பர் மாதம் முதல் திகதி இதற்கான பதிலை யுதாண்ட் தெரிவிக்கவிருக்கிறார். இப்பதவிக்குமீண்டும்நிற்கவிரும்பாததற்கு சொந்தக்காரணம் ஏதும் இருப்பின் யுதாண்ட் இதுவரை தெரிவித்திருப்பார். ஆனால் அவர் அவ்வாறு தெரிவிக்கவில்லை.

எனவே உலக அமைதியைப் பாதுகாக்கும்பொறுப்புவாய்ந்த தலைமைக்காரியதரிசிப் பதவியில் 'ஆமாம் சாமி' போடும் பொம்மையாக இருக்க அவர் விரும்பவில்லை.

சில பிரச்சினைகளைத் தீர்க்க யுதாண்ட்செய்தமுயற்சி ஓரளவாவது வெற்றியளித்திருக்கிறது. தீர்க்கப்படவேண்டிய வியட்னும்போன்ற மிக ஆபத்தான பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமலிருக்கின்றன. இவற்றுக்கு யுதாண்ட் கூறிய யோசனைகளை வல்லரசுகளும் மற்றும் பலநாடுகளும் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவற்றையேற்காதபோது யுதாண்ட் தொடர்ந்துபதவியிலிருப்பாரா? இருக்கத்தான் வேண்டுமா? பதவியில் தொடர்ந்து இருங்கள்என்று கேட்பதில்தான் அர்த்தம் உண்டா?

### நாயை விரட்ட மிளகுப் புகை

தபால் கொடுக்க வரும் தபால்காரனை கடிக்காத நாயும் ஒரு நாயல்ல! உலகமெங்கும் தபால் அதிகாரிகளுக்கு தலைவலி தரும் பிரச்சினை இது. சென்ற ஆண்டில் ...கில் பகுதியில் 100 தபால்காரர்களை நாய்கள் கடித்துவிட்டன. நாய்களின் தாக்குதலிலிருந்து தபால்காரர்களைப் பாதுகாக்க இங்கு புதுமையான சாதனம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சிவப்பு மிளகிலிருந்து தயாரிக்கப்பட்ட புகையைக் கடிக்கவரும் நாய்மீது பிரயோகிப்பதே இச்சாதனம். இதனுல் நாய்க்கு தீங்கு ஏதும் சம்பவிப்பதில்லை.



மதுரை திருஞானசம்பந்த ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளிடம் (மணிபாகவர்) காஷாயம் பெற்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிராஞக யாழ்ப்பாணம் திரும்பிய போது சுவாமிகள் பலாலி விமான நிலைய[illegible] காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாரச் சிறுகதை

# ஆணி வேர்

— ஜோவலன் வாஸ் —

"நிர்மலா! உனக்கு மூளை இருக்கா? இன்று என்று தெரிந்தும் அதில் விழப் போகிறேன் என்கிருயே" என் அப்பா - ஆத்திரத்துடனும் படபடப்புடனும் கூறினர்.

நான் மௌனமாக அம்மாவைப்பார்த்தேன். "அம்மா, நான் செய்த முடிவு தவறு? என்னை மணந்து கொள்ள மறுத்த ஒருவர் நோயால் அவதிப்படுகிருர். அவரை வாழ்விக்க நான்போகிறேன் என்கிறேன். இது தவரு அம்மா! நீயே சொல்லம்மா!" - என் கண்கள் பேசின.

"நிர்மலா, அப்பாவும் உன் நன்மைக்குத்தானே அம்மா சொல்கிருர். அன்று-உன்னைக் கல்யாணம் பண்ண வேண்டிய தினத்திலே எல்லோர் முன்னிலையிலும் அவமானப் படுத்திவிட்டுப் போனுனே, அவன் காலிலா போய் மண்டியிடப் போகிருய்?" என்று கெஞ்சினுள் அம்மா.

"இல்லையம்மா. மண்டியிடப் போவதில்லை. என் தியாக உணர்ச்சியை அவருக்கு எடுத்துக்காட்டி, அவரை மண்டியிடச்செய்யப் போகிறேன்!" என்றுவாதாடினேன்.

"சயரோகத்தினுல் பீடிக்கப்பட்ட ஒருவனுக்கு நீ மனைவியாகி வாழ்ந்து சாவதைவிட, என் வீட்டிலேயேகன்னியாக செத்துவிடு! போ உள்ளே!" என்று கர்ச்சித்தார் அப்பா.

"அப்பா!" என்று கத்தினன் நான். "அவர் க்ஷயரோகியாக இருக்கலாம். அவர் எனக்குச் சயரோகம் என்று கதை கட்டி அன்று ஒதுக்கியும் விட்டிருக்கலாம். ஆயினும் ஒரு பெண்ணுக்கு ஒருவன் தானப்பா கணவன்! என்று என்னை அவருக்கு என்று நிச்சயம் செய்தீர்களோ, அன்றைக்கே நான் அவர்மனைவியாகிவிட்டேன்; அவர் என் கணவனுகிவிட்டார். என் மனச்சாட்சியின் படி நான் வாழாவெட்டி என்று பெயர் பெற்று வாழ்வதைவிடக் கணவனுக்குப் பணிவிடை செய்து சாக விரும்புகிறேன் அப்பா!"-

என் உள்ளம் வடித்த கண்ணீர் வார்த்தைகளாக வெடித்துச் சிதறின.

"சீ! கழுதை! எதிர்த்துப் பேசுற அளவுக்குத் துணிந்துவிட்டாயா? போ உள்ளே?" என்று என் கையைப் பிடித்திழுத்து அறைக்குள் தள்ளினுர் அப்பா. வெளியே கதவு பூட்டப்பட்டது. என் இதயக் கதவு அவருக்காகத் திறந்துதான் கிடந்தது!

கட்டிலில் படுத்துக் கொண்டே தலையணையை நனைத்துக் கொண்டிருந்தேன். காரிருளில் மின்னலென பழைய சம்பவங்கள் 'பளிச், பளிச்' என்று மின்னிக் கொண்டிருந்தன! ஆறு மாதங்களுக்கு முன்னர் நடந்தஅச்சம்பவம் சுழன்று சுழன்று புயலாகவீசியது என் உள்ளத்திலே!

❀

அன்று—

கெட்டி மேளம் முழங்கி, நாதஸ்வரம் இசைத்து, பொட்டும் பூவும், சந்தனமும் தாம்பூலமும் நிறைந்து இருக்கவேண்டிய அந்தக்கலியாண வீடு—

அமைதி முத்திரையின் ஆட்சிக்கடிமையாகிய பாலைவனம் போல் வறண்டு கிடந்தது. "மாப்பிள்ளை இன்னமும் வரவில்லையா?" கலியாண வீட்டுக்கு வந்திருந்த ஒருவரின் கேள்வி இது.

'இல்லை', இல்லை என்ற சொல் என்மீது இடிஇடித்தது போலிருந்தது.

அந்தப் பிள்ளையைப் பெற்றவர், என் மாமனுராக வரவேண்டிய நாராயணப் பிள்ளை. தலைகுனிந்தபடி நின்ருர். ஒரே பையன் என்ற காரணத்தால் மிகவும் செல்லமாக வளர்த்துவிட்டதன் பலன் எல்லோர் முன்னிலையிலும் அவருக்கு அவமானத்தைஏற்படுத்திவிட்டது.

"இந்தாங்க! இப்படிமுகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டிருப்பதால்யாருக்கு என்ன இலாபம்! கல்யாணம் என்னவோ நின்றுபோச்சு. இனி யாருக்கும் பிரயோசனமில்லாமல் இங்கே ஏன் இருக்கவேண்டும்!" என்று நாராயணபிள்ளையிடம் கூறினுள் அவர் மனைவி பார்வதி.

நீண்ட பெருமூச்செறிந்து அவளைப் பார்த்தார் நாராயணப்பிள்ளை. "பார்வதி! நம்ம நாகராசன் கடைசி நிமிஷத்திலே இந்த மாதிரிக் கல்லைத்தூக்கிப் போடுவான் என்று நான் நினைக்கவே இல்லை. இதற்குத்தான் அவனுக்குப் பெண்ணைப் பிடிச்சிருக்கா என்றுமீண்டும்மீண்டும் கேட்டேன். அந்தப் பொண்ணு நிர்மலாவை நினைச்சால்தான்-" என்று கலங்கினுர் அவர்.

"அவனும் தான் பெண்ணைப் பிடிச்சிருக்குது என்ருன். இப்போ என்ன வந்ததோ கேடு?" என்று வருந்தினுள் பார்வதி.

நடந்தது வேறென்றுமில்லை. மனையிலே உட்காரவேண்டிய மாப்பிள்ளைக்கு யாரோ போய்ச் சொன்னுர்களாம் எனக்கு சயரோகம் என்று! என் அழகிலே மனத்தைப் பறி கொடுத்ததாகக் கூறிய அந்தமாப்பிள்ளையும், என் மெலிந்த உடலை நினைத்துப் பார்த்து அந்த 'உண்மை'யை ஒப்புக் கொண்டு விட்டார்.

அதன் பின்னர் எழுந்த ரகளையை என் மனம் மீண்டும் எப்படி எண்ணும்? மண வாழ்க்கையில் மகிழவேண்டிய நான் மனம்நோக அழுது கொண்டிருந்தேன்!

கூட்டம் கூட்டமாகப் பெண்களும் ஆண்களும் குசுகுசுவென்று பேசிக்கொண்டிருந்தனர். "கல்யாணம் ஏன் திடீரென்று நின்றுபோச்சு?" என்று யாரோ யாரிடமோ கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"பெண்ணுக்கு க்ஷயரோகம் என்று பையன் ஒதுக்கிட்டானும்!" கதை பரவிக் கொண்டிருந்தது.

"அது பற்றி முன்னுலே விசாரிக்க வில்லையாமோ?" என்றது ஒரு குரல்.

"விசாரித்தார்களாம். ஆனுல் இதெல்லாம் சொல்லித் தெரியக்கூடிய விஷயமா? அவளைப்பார்த்தாலும் டி. பி. காரி மாதிரித்தானே மெலிந்து போயிருக்கிருள். உண்மையிலே டி. பி. யாக இல்லாது போனுல் பையன் ஏன் ஒதுக்க வேண்டும்!", என்று தீர்ப்புக்கூறியது வேருெரு குரல்!

பலரது ஏளன மொழிகளைக் கேட்டுக் கொண்டிருந்த நான் என்னருகில் வந்துநின்ற நாராயணப் பிள்ளையையும் அவர் மனைவியையும் கவனிக்கவில்லை.

"நிர்மலா!" என்றழைத்தார் அவர்.

திடுக்குற்றுப்பார்த்த நான் ஆவேசம் வந்தவள்போல் எழுந்தேன். "உங்களை யார் வரச்சொன்னுர்கள் இங்கு? போய்விடுங்கள் வேளியே! என் அறைக்குள் வராதீர்கள்! என் வியாதி உங்களையும் பற்றிக்கொள்ளும். போய்விடுங்கள் வெளியே" என்று கோபத்தால் கூச்சலிட்டேன்.

"நிர்மலா! எங்களை மன்னித்துவிடம்மா! உன் அப்பாவின் குணமும் உன் குணமும் எங்களுக்கு நன்ருகத் தெரியும். உனக்கு வியாதி ஒன்றுமில்லை என்றும் தெரியும். ஆனுல் உன்னைவிரும்பாமல் யார் பேச்சையோ கேட்டு தன் அறிவைஅடைவு வைத்துவிட்டான்என்மகன். வற்புறுத்தி மணம்முடித்து வைத்தால் அவனிடம் நீ என்ன சுகத்தைக் காணப் போகிருய் என்றுதான் நானும் வற்புறுத்தவில்லை!" என்று தழதழத்த குரலில் கூறினுர் நாராயணப்பிள்ளை!

"மாமா...!" என்று அலறிவிட்டேன் நான். பார்வதி அம்மாள் என்னை அணைத்துக் கொண்டாள்.

"மாமா! எனக்கும் உங்[illegible] [illegible] ஞலும் உங்கள் மகனையே கணவனுகவரித்துவிட்டேன். இனி நான் வேறு யாரையும் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை.

அதிர்ச்சியடைந்தார் நாராயணப்பிள்ளை. "இல்லை நிர்மலா, நீ வாழவேண்டும். என்மகனை மறந்துவிட்டு வேருெருவரைப் பார்த்துக் கல்யாணம் செய்துகொள். உன் வாழ்க்கை இன்பமாக மலரட்டும்.

நாட்கள் சிறிப்பாய, மாதங்கள் பயந்து ஓடின. இரண்டு நாட்கள் முன்வரையிலும் எவ்விதச் சலனமும் இன்றிஓடியதுஎன்வாழ்க்கை ஆனுல்-காமினி வந்து புயலை உண்டாக்கிவிட்டாளே.

"நிர்மலா, சேதி தெரியுமா?" என்று கூறிக்கொண்டே வந்தாள் அவள்.

"என்ன காமினி?" என்று கேட்டேன்.

"உனக்கு டி. பி. என்று ஒதுக்கினுனே ஒருமடையன். அவனுக்கு டி. பி. யாமே!"

"என்ன? நாகராசருக்கு டி. பி.யா? யார் சொன்னுர்கள்?" பரபரப்புடன் கேட்டேன்.

"அத்தான் பட்டணத்திலிருந்து வந்திருக்கிருர். அவர் தான் சொன்னுர்" என்ருள் காமினி.

'ஐயோ, அவள் ஏன் இந்தச் செய்தியைச் சொன்னுள்.' நெஞ்சின் சுமையால் மூச்சே நின்றுவிடும்போலிருந்தது.

"நிர்மலா, நிர்மலா! என்று பரிவுடன் அழைத்துக் கொண்டு கதவைத் திறந்து வந்தாள் அம்மா. கட்டிலில் கிடந்துகொண்டே எண்ணச் சுழிகளில் ஆழ்ந்திருந்த நான் சுய உணர்வு பெற்றேன். "அம்மா! என்மீது உனக்கு இரக்கம் இல்லையாம்மா?"

"நிர்மலா! நீ உன் பிடிவாதத்தை விடமாட்டேன் என்கிருயே!" என்றுவருந்தினுள் அம்மா.

"ஒரேயொருமுறை அம்மா நான் நாராயணப் பிள்ளை வீட்டுக்குப் போய் வருகிறேன் அம்மா. டி. பி. நோயில் கிடக்கும் அவரிடமே கேட்டுப்பார்க்கிறேன் அம்மா. இரகசியமாக நான் போய் வருகிறேன். அவர் விரும்பினுல் சேர்ந்து வாழ்கிறேன். இல்லாதுபோனுல் திரும்பி வருகிறேன்!" என்று கண்களில் நீர் மல்கக்கெஞ்சினேன்.

"அப்பாவிடம் சொல்லிப் பார்க்கிறேன்!" என்றுஇழுத்தாள் அம்மா. "வேண்டியதே இல்லை!" என்று கூறிக்கொண்டே அப்பா உள்ளே வந்தார். "நிர்மலா, நீ அம்மாவிடம் சொன்னதைக் கேட்டேன். உன் வாழ்க்கைக்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன். உனக்கு அறிவு இருக்கிறது. சகிப்புத் தன்மை இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக உறுதியிருக்கிறது. நீ பிழைத்துக் கொள்வாய்-போய் வா, நிர்மலா!" என்று மனம் நிறையக் கூறினுர் அப்பா!

நான் பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்தேன். என் மனத்துள்நம்பிக்கைவேரூன்றியது.

புறப்பட்டேன்.

(யாவும் கற்பனை)

## சன்னிதி முருகன்

பல்லவி

சன்னிதி வேலவனைச் சரணடைந்தேன்-நான்
என்உயிர்த் தீவினைக் கரைகடந்தேன் ...சன்னிதி

அனுபல்லவி

மன்னுயி ரெல்லாம் தன்னுயி ராக
மலர்விழிக் கருணை மாமழை சொரியும்.....சன்னிதி

சரணம்


வள்ளியைக் கண்டுதன் உள்ளம் துவண்டு
வாஞ்சை மிகுந்தவள் வாயிலில் நின்று
கள்ளஞ் செயக்குற வள்ளி பயந்து
கட்டியணைக்கமெய் தொட்டுப் புணர்ந்த..சன்னிதி

காவடி யாட்டம் கண்டுதன் நாட்டம்
களிப்புற ஓட்டும் கவலைகள் ஈட்டம்
மாவினை போக்கும் மாண்பினை ஆக்கும்
மரகத வேலனென் மாற்றுயர் தெய்வம்...சன்னிதி

அடியவர் போடும் அரோகரா முருகா
அற்புத மந்திர சக்தியி லடங்கி
கொடியவெம் பாவம் நொடியினில் மாள
குறைவிலா நிதியம் நிறைய அளிப்பான்...சன்னிதி

அழகா வேலா அரோகஹரா முருகா
ஆண்மை தருஞ்சிவ சக்தி பாலா
குழகா குமரா சன்னிதி முதல்வா
குகனே குருவா யெனையாண் டருள்வாய்...சன்னிதி

--சு. வீ.



முதற்பல் முளைப்பதற்கு
முன்னமே
உங்கள் செல்வனுக்கு
வேணடியது
அலன்பெரீஸ்
மால்ட்டெட் றஸ்க்
இலங்கை ஏஜெண்டுகள்
மாக்வூட்ஸ் லிமிட்டெட், த. பெ. 91, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடப வழிபாடு

## அயல் நாடுகளில் சைவம்

ந.சி.கந்தையாபிள்ளை

இந்தியாவில் தற்கால ஆயுதங்களோடு இலிங்கமும் இடபமும் காணப்பட்டன. (அடுத்த கட்டுரையில் இலிங்க வழிபாடுபற்றிக்கூறுவாம்) இலிங்கவழிபாடு இடப வழிபாட்டோடு சம்பந்தம் பெற்றிருந்தது. இலிங்கவழிபாடு இடபவழிபாட்டோடு என் சம்பந்தம் பெற்றிருந்ததென்பதை அறியமுடியாமலிருக்கின்றது. மொகஞ்சதாரோ காலத்தில்சிவவழிபாட்டோடு இடபம் சம்பந்தப்பட்டிருந்தது. இராமாயணம் இடபம் சிவனின் இன்னொரு வடிவு எனக் கூறுகின்றது. சிவபெருமான் முப்புரங்களை எரித்தபோது, திருமால் இடப வடிவில் அவரைத் தாங்கினார்; ஆகவே அவருக்கு இடபம் வாகனமாயிற்றென புராணம் கூறுகின்றது. தான் இடபமாகச் சிவபெருமானைத் தாங்கவேண்டுமென இடபம் அவரிடம்வரங்கேட்டது. ஆகவே இடபம் சிவபெருமானுக்கு வாகனமாயிற்று எனவும் புராணம் கூறும். முற்காலத்தெய்வங்களும் அரசர்களும் முடியில் இரண்டு கொம்புகள் இருந்தன. கொம்புகள் அதிகாரத்தை உணர்த்தும் சின்னமாக விளங்கின. இக்கொம்புகளுக்கும் இடபத்துக்கும் சம்பந்தமுண்டோவென்பது சிந்திக்கவேண்டியது.

"இடபவழிபாடு எகிப்து, கிரீஸ் முதலியவும் பிறவுமாகிய நாடுகளில் இருந்திருக்கிறது. கிரேக்கர் இடபத்தை எபாபுஸ் என்னும் பெயரில் வழிபட்டார்கள். பக்கஸ் தெய்வம் சிலசமயங்களில் இடபவடிவில் அல்லது மனித வடிவுக்கும் இலுவை வடிவுக்குமிடையில் நிற்கும் இடப வடிவிலும் வழிபடப்பட்டது. எகிப்தியர், ஒசிரிஸ் கடவுளின் உயிர் இடபத்தில் இருக்கிறதென நம்பினார்கள். அவர்கள் இடபத்தை அப்பிஸ் என்னும் பெயரில் மெம்பிஸிலும், மினேவிஸ் என்னும்பெயரில் எலியோபொலிசிலும் வழிபட்டார்கள். இருக்கவேண்டிய குணங்குறிகளுடைய இடபம் இடையாவிடில் பொன்னால் செய்யப்பட்ட இடபம் உயிர் இடபத்தைப்போல் வழிபடப்பட்டது. இசிரவேலர், கிரேக்கர், உரோமர்களிடையும் இவ்வழிபாடு இருந்தது. கிரேக்கரின் பக்கஸ் கடவுள் இடபத் தலையுடையதாகவிருந்தது என்று ஸ்ராபோ கூறியிருக்கின்றார். ஆர்மோனைட்டுக்களின் தெய்வமாகிய மொலோச்சும் இவ்வடிவில் வழிபடப்பட்டது. சிரிய நாட்டுக்கடவுளாகிய எபெனுக்கு (Heben) இடபத்தின் உடல் உண்டு. மித்திரா என்னும் பெண்தெய்வம் இடபத்தின் மனைவியாகக் கொள்ளப்பட்டது; பாரசீகரும் இடபத்தை வழிபட்டார்கள். (Phallic worship-Scott George.)

"கிரேக்கரின் எழுச்சிக் காலத்தில் மத்தியதரைக் கடலோரங்களிலுள்ள எல்லா நாடுகளிலும் இடபம் சராபிஸ் என்னும் பெயரில் வழிபடப்பட்டது. இதைக்குறித்து வெறுப்படைந்த தெதூலியன், "கிரீசிலும் எகிப்திலும் மாத்திரமன்று உலகம் முழுமையிலுமுள்ள மக்கள் இவ்வாபிரிக்க விலங்கின்மீது சத்தியஞ்செய்கிறார்கள்" என்றும் கிரீத்தீவில் இடபம் சூரியனைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டதெனவும் கூறியுள்ளார். (Zeus- Bernard Cook.)

"இடபம் இந்திரனையும், சிவனையும் குறிப்பதாகவிருந்தது. செமித்திய மக்கள் இடப வடிவில் கடவுளை வழிபட்டார்கள். இடபத்தோடு சம்பந்தப்படாத அல்லது இடபத்தில் கலந்து மறைந்துவிடாத செமித்திய தெய்வம் இல்லையெனக்கூறலாம். சின் என்னும் தெய்வம் பலம் வாய்ந்த கொம்புகளுடையது. வலிமையைக்குறிக்கும் அபிர் என்னும் சொல் இடபத்தைக் குறித்தது. எபிரேயர் சமய நூல்களில்வரும் அபிர் என்னும் சொல்லுக்கு வலிமை என்று பொருள் கொள்ளாது இடபம் என்று பொருள்கொள்ளவேண்டும். முற்காலத்தில் யேகோவாக் கடவுள் இடபவடிவில் வழிபடப்பட்டார். இஸ்ரவேலரின் ஆன்கன்றும் இதுவே. கடவுளை இடபவடிவில் வழிபடுவது சமயக்கொள்கைகளுள் ஒன்றாகவிருந்தது. கிரேக்கரின் தயோனிசஸ் தெய்வம் இவ் வடிவுடையதாகவிருந்தது. தயோனிசஸ் இடப வடிவில் வழிபடப்பட்டதென்று கிரேக்கர் கூறினார்களென புலுத்தாக் கூறியிருக்கின்றார்." — (The mothers-Robert Briffault.)

"யூதர் இடப விக்கிரகங்களை வணங்கினர். அவ்வணக்கத்தை அவர்களிடமிருந்து முற்றாக மறைத்துவிடமுடியவில்லை. எதரோபோம் என்பவரால் அது உயிர்ப்பிக்கப்பட்டது. அவர் இரண்டு ஆன்கன்றுகளைச்செய்து ஒன்றைப் பெத்தெல்லிலும் மற்றதை தை(Dai) என்னுமிடத்திலும் வைத்தார். எகிப்திலின்றும் தம்மை மீட்டுக்கொண்டு வந்த கடவுளாக ஆன்கன்றை இசிரவேலர் வழிபட்டார்கள். (Studies in ancient history - John Ferguson)

பக்கஸ் கடவுள் அல்லது படைக்கும்சக்தி கிரேக்கரின் கோவில்களிலும் நாணயங்களிலும் இடப வடிவில் காணப்பட்டது. பக்கஸ் சில சமயங்களில் மனித வடிவிலும், சில சமயத்தில் கொம்புள்ள மனித முகத்துடனுமிருந்தது... சினுவில் கொம்புடைய இடபத்தின்கோயில் என்னும் கோயிலுள்ளது இதே இடம் இந்தியாவிலும் ஜப்பானிலும் மரியாதை பெறுகின்றது. மேற்கு உலகின் அந்தத்திலும் இவ்வழிபாடு இருந்தது. இப்ரியல் ஸ்பெயின் நாட்டின்மீது படையெடுத்தபோது அவர்கள் தமது வெண்கல இடபத்தின் வடிவை எடுத்துச்சென்றார்கள் தொர் என்னும் கடவுளின் பெயரும், ஸ்காந்திநேவியரின் யூபிதர் கடவுளின் பெயரும் இடபத்தைக் குறிக்கின்றன. அரேபியர் தமது கடவுளை இடப வடிவில் வழிபட்டார்களெனத் தெரிகிறது. (Symbolical language of art and mythology-Richard Payne Knight)

வடசிரிய செமித்தியர்வழிபட்ட இடபம் அயல்நாட்டிலிருந்து வந்திருக்கலாம். பாபிலோனியரின் இடபத் தெய்வம் சுமேரிய உற்பத்தியைச் சேர்ந்தது. செமித்திய-பாபிலோனியர் அதற்கு இட்டு வழங்கிய பெயர்கள் சுமேரியத்திலிருந்து இரவல்பெறப்பட்டவை. ஹிதைத்நாட்டுச்செல்வாக்கு வடசிரியாவிலிருந்தது. அங்கு இடப உருவங்கள் வழிபடப்பட்டன. பாபிலோனியாவில் இடப உருவங்கள் கோவில் வாயில், வீட்டு வாயில் அல்லது தோட்ட வாயில்களைக் காவல்செய்தன. (E. of Religion aud Ethics)

"பெத்தெல், தான் (Dan) என்னுமிடங்களில் வைக்கப்பட்டிருந்த பொன் இடபங்கள் கடவுளாகக்கொள்ளப்படவில்லை. அவை கண்ணுக்குப்புலப்படாத கடவுளின் வாகனமாகக்கொள்ளப்பட்டன."-(What means these stones-Nillar Burrows.)

---

—8—

இ. போ. ச. பஸ்ஸில்

# ஒரு நெடுவழிப் பயணம்

— "காங்கேயன்" —

நாங்கள் பிரயாணம் செய்த 22 இரு இலக்கத் தொடர் பஸ் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு புதிதாக்கி அனுப்பப்பட்ட லேய்லந்து பஸ். 16 அடி வேங்கை. பார்த்தால் பசுப்போலத் தோற்றினாலும் பாயத் தொடங்கினால் புலிபோலப் பாய்கிறது. மணிக்கு 30 மைல் நிதான வேகமானாலும் ஏரோப்பிளேன் போலச் சத்தம் போடுகிறது. பிரயாணிகள் உள் நுழைவதற்கு ஒரு வழியும் வெளியேறுவதற்கு இன்னொரு வழியுமாக இரண்டு வாயில்கள் இந்த பஸ்ஸுக்கு. 40 பேர் தட்டுமுட்டுப் படாமல் உட்காரலாம். பள்ளிக்கூட மாணவர் இன்னமும் இந்த பஸ்ஸினுள் நுழைந்திருப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. இதை எப்படிக் கண்டுபிடித்தேன் என்றால்- பஸ்ஸில் எழுதியிருக்கும் அறிவித்தல் வாசகம் பழுதுறாமல் அப்படியே இருக்கிறது. அதில் முதல் எழுத்துக்கோ கடைசி எழுத்துக்கோ இன்னும் ஆபத்து சம்பவிக்கவில்லை. சிறு இலக்க எழுத்து அழிப்பு இயக்கத்தின் ஞாபகார்த்தமாக நமது பள்ளிக்கூட மாணவர் கைக்கொண்டிருக்கும் ஒரு குறும்பு. பஸ்ஸினுள்ளே பிரயாணிகளின் பார்வைக்குப்படும்படியாக எழுதியிருக்கும் 'புகைத்தலாகாது' என்பது போன்ற அறிவித்தல் வாசகங்களில் கைவைப்பது. அந்த அறிவிப்பின் முதல் எழுத்தையோ கடைசி எழுத்தையோ அல்லது நடுவில் ஓர் எழுத்தையோ திருட்டுத்தனமாக ஒருவன் அழித்துவிடுவான். மறுதினம், அவர்களே பஸ்ஸில் ஏறி கூட்டமாக கூடியிருந்துகொண்டு ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் "நோ ஸ்மோகிங்' என்பதை 'ஓ, ஸ்மோக்கிங், ஓ ஸ்மோக்கிங்' என்று உரக்க வாசித்து ஒகோ என்று சத்தம் போட்டுச் சிரிப்பார்கள். பஸ் கண்டக்டர் ஒன்றும் புரியாமல் விழிப்பார். இவர்கள் பாஷையில் சொல்வதானால் எங்கள் பிரயாணம்கூட சும்மா ஒரு 'அவுட்டிங்' தான், நேயரே. அல்லாமல், வேறு எவ்வித குறிக்கோளுமற்றது. பஸ் புறப்பட்டது, கிளம்பிவிட்டோம். அவ்வளவுதான். நமது முன்னோர்களின் அடிச்சுவட்டில் சென்று கிழக்கிலங்கையில் கொடி நாட்டும் நோக்கமோ அல்லது அவர்களுக்குப் பின்வந்தவர்கள் போட்டியிட்டதைப்போல- இன்னமும் போட்டியிடுவதைப் போல, கிழக்கைக் கைப்பற்றும் உத்தேசமோ உபாயமோ கிஞ்சித்தும் கிடையாது. மட்டக்களப்புப் பன்புல்லில் இழைத்த அந்தப் புகழ் பெற்ற பசும்புற்பாயில் ஒன்றை மெதுவாகச் சுருட்டிக் கட்டிக்கொண்டு வந்துவிடக்கூட நாம் துணிந்தோமில்லை. அந்தப் பாய்க்குத்தான் ஊரெங்கும் என்ன மதிப்பு. அதிலே மெத்தைப் பாய், கம்பளப்பாய் என்று பலவகை உண்டாம். இரத்தினக் கம்பளம்மாதிரியே இருக்குமாம்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் டைம்கீப்பர் முதலானோர் சூழ்ந்து நின்று கண்களால் தழுவி கரங்களால் தடவி ஆசீர்வதித்து அனுப்பிய 'பட்டிகலோ எக்ஸ்பிரஸ்' ஓரிடத்தில் ஓடாமல் நின்றுவிட்டது. ஆனாலும், பிரயாணிகள் முழுப்பேரும் கூடி அதைத் தள்ளி ஓடவைக்க வேண்டிய 'கஷ்டகாலம்' நேரவில்லை. முறிகண்டி விநாயகருக்கு எங்கள் பஸ் டிரைவர் கர்ப்பூரம் கொளுத்தி வழிப்பயண விக்கினங்களை விலக்கி அருளவேண்டிய வழிபட்டுக்கொண்டு மேலே போய்க்கொண்டிருந்த போதுதான் நடுக்காட்டில் இந்த விக்கினம் சம்பவித்து பஸ் நின்றுவிட்டது. கண்டக்டர் ஆணைபிட்டமாத்திரத்தே பிரயாணிகள் முழுப்பேரும் ஒரு குஞ்சு குழந்தைகூட பாக்கியில்லாமல் பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கி நின்றோம். ஆனால் டிரைவரோ தமது ஆசனத்தில் முழுப் பொலிவுடன் அப்படியே இருந்தார். என்ன நடக்கப்போகிறதோ என்று நாம் திகைத்து நிற்கையில் பஸ் எங்களை விட்டு விலகி தெருவிலிருந்து கான் கரட்டுக்குள்ளே ஒதுங்கி ஒதுங்கி மெதுமெதுவாய் நகர்ந்து மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி அப்படியே பாதி வட்டம் போட்டுக்கொண்டு மறுபடியும் தெருப்பாதைக்கு ஏறுகிறது. ஏது, நம்மை இந்த திக்குத் தெரியாத காட்டில் தியங்கவிட்டு அது எங்கே ஓடோடிப் போய்விடப்போகிறதோ என்று கலவரப்பட்ட நாம் அத்தனை பேரும் அதனைத் துரத்திக்கொண்டு அதன் பின்னால் ஓடுகிறோம். அப்பொழுதுதான் குறுக்கே நடுத்தெருவில் பொதி சுமக்கும் வாகனம் ஒன்று அதன் ஒரு கால் முடமாகிப்போய் அவலப்பட்டுக் கிடப்பதை பார்க்கிறோம். வெளி ஊருக்கு எங்கேயோ நாற்றுக்கணக்கில் யாழ்ப்பாணத்து வாழைக்குலைகளை ஏற்றிச் சென்ற பொதி சுமக்கும் லொறி ஒன்றுதான் நடுக்காட்டில் அதன் நாலு சக்கரங்களில் ஒன்றைத் தொலைத்துவிட்டு உடைந்து முடங்கிப்போய் அப்படி அவலப்பட்டுக் கிடக்கிறது. லொறிக்காரர்களில் ஒருவர், அச்சாணி கழன்று ஓடிப்போன சக்கரத்தைத் தேடிக்கொண்டு காட்டுக்குள்ளே போய்விட்டாராம். மற்றவர் அவரை வெகுநேரம் எதிர்பார்த்திருந்துவிட்டு வாழைக் குலைகள் முழுவதையும் தானே இறக்கி தெருக்கானுக்குள்ளே நேர்த்தியாக அடுக்கி வைத்துவிட்டு பக்கத்தே காட்டுக்கொள்ளிகளையும் அடுக்கி தீமூட்டிவிட்டு தரையில் முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். நெருப்பு மூட்டியது அவர் குளிர்காய்வதற்கல்ல; வாழைக்குலைக்குப் புகைப் போடுவதற்காயுமிருக்காது என்றே நினைக்கிறேன். ஒருவேளை அந்த முடக் கழுதையைக் கொளுத்திப் பொசுக்குவதாயிருக்கும்.

(முற்றும்)

## ஒரு வார்த்தைக்கு மூன்று பவுண்!

உலகப் பிரசித்திபெற்ற ஆங்கில நாவலாசிரியர் சார்லஸ் டிக்கன்ஸ் (1812—1870) நான்கு ஆண்டுகளுக்குமேல் பள்ளியில் படித்ததில்லை.

ஏழ்மையின் எல்லையில் ஆரம்ப காலத்தில் வாடித்தவித்த இவர் பழைய கண்ணாடி சாக்கலைக் கழுவி, விற்றுப் பிழைப்பு நடத்தி வந்தவர். ஆனால் அப்போதே அவரிடம்தாம் ஒருசிறந்த எழுத்தாளனாக வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்திருந்தது. ஓய்வு நேரங்களில் கதைகள் எழுதுவார். அவற்றைப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைப்பார். யாராவது தமது கதைகளைப் பரிகசிப்பார் என்ற பயத்தில் தாம் எழுதிய கதைகளை நள்ளிரவில் தான் போஸ்ட்செய்வார். ஆனால் அவைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு இவரிடமே திரும்பிவந்துகொண்டிருந்தன. முயற்சியைக் கைவிடவில்லை இவர் எழுதிக்கொண்டே இருந்தார். கடைசியில் ஒரு பத்திரிகை இவரது கதையைத் தேர்ந்தெடுத்துப் பிரசுரித்தது. தம் கதை பிரசுரிக்கப்பட்டதைக் கண்டு, பேரானந்தமுற்று நண்பர்களிடமெல்லாம் கூறிக்கொண்டிருந்தார். தொடர்ந்துமேலும் பல கதைகள் பிரசுரமாயின. ஆனால் முதல்எட்டு கதைகளுக்கு சன்மானம் எதுவும் இவருக்குக் கிடைக்கவில்லை. ஆனால் நாளாவட்டத்தில் பெயரும், புகழும் சேர்ந்தது. டிக்கன்ஸின் எழுத்துக்களுக்கு அலாதி மதிப்பு ஏற்பட்டது. அவர் எழுதிய கையெழுத்துப் பிரதியை வார்த்தை ஒன்றுக்கு மூன்று பவுண் [illegible] கொடுத்து வாங்க [illegible] வெளியீட்டாளர்கள் காத்துக்கிடந்தனர்.

சலக்கழிச்சல்

தோல்சம்பந்தமான சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலியன குணப்படுத்த உத்தரவாதம்.

சச்சிதானந்தா வைத்தியசாலை

மித்திரன் அம்பாள் கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி P. O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுமாப்பு இல்லாத எளிமை

புகழ்ச்சியை விரும்புகிறவன் மனிதன். இந்தக்குணம் பொதுவாக எல்லாமனிதரிடத்திலும் இருக்கிறது. சிலர் அதனை வெளியாகக்காட்டிக் கொள்ளுவர். அறிவு, அடக்கம் என்னும் அரும் பண்புகளை வளர்க்கவிரும்புவோர் அதனை இலகுவாக வெளியே காட்டிக்கொள்ளார். ஆயினும், அவ்விருப்பம் எவரையும் விட்டு நீங்குவதில்லை. புகழை விரும்பாதவர் எவராவது ஆயிரத்தில் ஒருவர் இருக்கலாம். அதுபுறனடை.

புகழ்ச்சியினால் தோன்றுவதே இறுமாப்பு - நான், எனது என்ற இறுக்கு. இந்த இறுமாப்பைச் செருக்கு என்றும், கர்வம் என்றும் குறிப்பிடுவர். நான், எனது என்பவற்றையே அகங்காரமமகாரம் என்பர். மக்களது வாழ்வைக் கெடுப்பதே இந்த இறுமாப்பு. புராணஇதிகாசவரலாறுகள் மாத்திரமல்ல, இக்கால உலக சரித்திரமே இதற்குச் சான்று பகரும். அதனால், இறுமாப்பு இல்லாத எளிமைக் குணத்தை மக்கள் ஒவ்வொருவரும் தமக்காக்கிக்கொள்ள முயலவேண்டும். அதுவே சாலச் சிறந்தது. அது ஒரேநாளில் எவருக்கும் கைவந்துவிடாது. அது படிப்படியாகவே பயிற்சியில் அமைய வேண்டும். அதனை எப்படி ஆக்கிக்கொள்ளலாம்?

இறுமாப்பில்லாத எளிமையைத் தமதாக்கிக் கொள்ள விரும்பும் எவரும், முதலில் இச்சகம் பேசுதலைவிட்டுவிட வேண்டும். இச்சகம் பேசுதலாவது, ஒருவன் பிறரிடம் சென்று தன் காரியசாதனைக்காக அவரிடம் உள்ளவையாவது இல்லாதவையாவது பாராட்டிப்பேசுவது.

"தம்மையே புகழ்ந்திச்சை
பேசினும் சார்பினுந்
தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப்
பாடாதே எந்தை புகலூர்
பாடுமின் புலவீர்காள்"

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புகலூர்ப் பாசுரத்திலே தெளிவாகக் கூறுகிறார். உலகத்திலே உயிர்வாழ்வதற்குமனிதனுக்குப்பொருள் வேண்டியதுதான். சுதந்திரமாக வாழவேண்டிய மனிதன், அழிந்துபோகும்-நிலையற்ற இவ்வுலகில்உயிர்வாழ வேண்டித் தன்மானம் இழந்து, பொருள் பெறுவதற்காகப் பிறனுக்கு அடிமைப் படலாமா? கூடு போதும் ஆகாது. ஆன்மாவானது எல்லாம்வல்லஇறைவன் ஒருவனுக்கே அடிமைப் பட-ஆட்பட வேண்டியது. அதனால், எந்த மனிதனும் இறைவன் ஒருவனைத்தவிர வேறு எவரையும் பாடாதிருத்தலை-இச்சகம் பேசாதிருத்தலை, ஒரு விரதமாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

"பிச்சைக்கு மூத்த
குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பல சொல்லி
இடித்துண்கை-சிச்சி
வயிறு வளர்க்கைக்கு
மானம் அழியா(து)
உயிர்விடுகை சாலஉறும்"

என்றார் நல்வழி நீதிநூலார். இதுவும் அக்கருத்தையே வலியுறுத்தவந்தது.

இரண்டாவதாக, நான் யார்? எனது என்பது யாது? என்று சிந்திக்க முயலவேண்டும். மனிதன் மண்ணிலே நடமாடுகிறான்; நீரிலே நீந்துகிறான்-ஏன்? நீரினுள் அமிழ்ந்திச் சுழித்தும் வேறெங்கோ மிதக்கிறான்; விண்ணிலே தாவிப்பாய்கிறான்- அதுமாத்திரமா? பூமண்டலம்விட்டுப் பிறமண்டலங்களுக்கும் போய்வரமுயலுகிறான். கட்டியை நீர்ப்பொருளாக்குகிறான். நீர்ப்பொருளைவாயுப் பொருளாக்குகிறான். அவற்றைப் பழையபடி நிலைப்படுத்துகிறான். இன்னும் எவையெல்லாமோ சித்துவித்தைகளுமே செய்கிறான். என்ன செய்தும் ஆம்பயன் என்ன? பிறக்கின்ற உயிரைப் பிறவாது தடுக்கவோ, இறக்கின்ற உயிரை இறவாது தடுக்கவோ, பிரிந்த உயிரை மீட்டு உடலுக்குள் புகுத்தி நடமாடச் செய்யவோ, உதிக்கின்ற சூரியனை உதிக்காது தடுக்கவோ, மறைகின்ற சூரியனை மறையவிடாது நிலை நிறுத்தவோ மாத்திரம் மனிதனால் முடியவில்லை.

ஓர் எல்லைக்கு வந்தவுடன் "That is beyond the human power" — அது மனிதஆற்றலுக்கு விஞ்சியது-அப்பாற்பட்டது, என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அதிகம் பேசுவது ஏன்? நான் பாடுபட்டு உழைத்த பணத்தினால் கட்டிய வீடு அங்கு என் செலவில் பொருத்தப்பட்ட மின்னொளி விளக்கு. அந்த விளக்கினுள் என் செலவில் மின்னோட்டம் நிகழுகிறது, ஆயினும், நான் அறியாமலே, எனது அநுமதியின்றியே மின்னோட்டம் தடைப்பட்டு விளக்கு அவிந்துவிடுகிறது. இதனைத் தவிர்க்க முடிகிறதா? இல்லையே. அதுபோல, "நான்" என்பது ஒன்று இல்லவேயில்லை. எல்லாம் ஆண்டவன் ஒருவனே; அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது. இதுஆப்தவாக்கியம். அவனை "நான்" என்று பிரித்து நினைப்பது அறியாமை. இன்று, நான்என்று காண்பது பொய்த் தோற்றம்-மித்தை.

"தத் துவம் அசி" —அது நீ ஆகிறாய்-இது மகாவாக்கியம்.

அப்படி ஆகின்ற நீ, அதனை மறந்தவுடன் உன்னை வந்து பிடிக்கிறது இறுமாப்பு. இறைவனை மறக்க மறக்க இறுமாப்பு இறுகுகின்றது. இறைவனை நினைக்க நினைக்க இறுமாப்பு இளகுகின்றது. நாம் எவ்வளவைக் கற்றிருந்தாலும், கற்றதை உணர்ந்தாலும், உணர்ந்ததைச் சாதிக்கமுயன்றாலும் இறைவனை நினைக்க மறந்தோமாயின், உலக மாயை வந்து மூடிக்கொள்ள, இறுமாப்பு முனைப்புக் கொள்ளத் தொடங்கிவிடும், அதனாலன்றோ,

நின்று மிருந்தும்
கிடந்தும் நடந்தும்
என்றும் நினைசிவன்

என ஆன்றோர் [illegible]ள்ளனர்.

இறுமாப்புக் கொள்ளுதல் தகாது என்று யாவரும் சொல்லிவர, அப்பர் சுவாமிகள் மாத்திரம் "இறுமாந்திருப்பேன்" என்றுசொல்லுகிறார். அது எங்கே? எப்படி? என்று பார்ப்போம்.

"இறுமாந் திருப்பன்
கொலோ ஈசன்பல்கணக்
கெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்
சேவடிக்கீழ்நின் றங்
கிறுமாந்திருப்பன்
கொலோ"

திருவங்கமாலை 11-ஆம் பாசுரம். இறைவனது சிவகணத்தவர் வரிசையில் சிறியேனும் ஒருவனாக வைத்து மதிக்கப்பட்டு, எம்பிரானு

**க. வை. ஆ. சர்மா**

ரது திருவடி நீழலில் இருத்தலாகிய பேரானந்தப்பெருவாழ்விலேதிளைத்து இறுமாந்திருப்பேன் என்கிறார் வாகீசவள்ளலார். அவர் கொள்ளும் இறுமாப்பு எங்கே? என் பெயர் பத்திரிகையில் வந்தவுடன் என் மனத்தில் எழும் இறுமாப்பு எங்கே? மலையும் மடுவும் போலாம் என்பதும் பொருந்தாதன்றோ!

இறுமாப்பு - அகம்பாவம் இல்லாத எளிமையை மேற்கொள்ளுபவனே மக்களில் உத்தமன். இதற்கு ஆதாரமாக, ஆதி சங்கராசாரிய சுவாமிகள் அருளிய ஸௌந்தரிய லஹரியின் இறுதிப் பாடலை நோக்குவாம்.

"ப்ரதிப ஜ்வாலாபிர் திவ
ஸகர நீராஜநவிதி
ஸுதா ஸூதே
ஸ்சந்த்ரோ பலஜல
லவை ரர்க்யரசநா!
ஸ்வகியை ரம்போபி:
ஸலில நிதிஸௌஹித்ய
கரணம்
த்வதியாபிம் வாக்பிஸ்
தவஜநநிவாசாம்
ஸ்துதிரியம்"

ஆதிசங்கராசாரிய சுவாமிகள் சாட்சாத் சிவபரம்பொருளின் அம்சமாக அவதரித்தவர் - அவர் அம்மையப்பராக விளங்கும் இறைவனது அருள் அழகையெல்லாம் திரட்டி, முன்னும், பின்னும், என்றும் ஒப்புச் சொல்ல இயலாத 100 பாடல்களை இயற்றினார். இறுதியான இச்செய்யுளில் என்ன கூறுகிறார் என்றால்—

உலகுக்கெல்லாம் ஒளி கொடுப்பவன் சூரியன். அந்த சூரிய பகவானுக்கு (ஆவணி மாசத்திலே வீட்டுமுற்றத்தில்) பொங்கிப் படைத்துக் கர்ப்பூர ஜோதியைக்காட்டி சுவாமீ இதனை ஏற்றுக் கொள்ளுவீராக என்பது போலஇருக்கிறது. தமியேன் தேவரீரைக் குறித்து இந்த நூலைச்செய்தது.

அமுத கிரணங்களை அள்ளிச்சொரிபவன் சந்திரன். பூரணை தினத்திலே சந்திர காந்தக்கல் குளிர்ந்த நீரைச் சொரியும் என்பர். அவ்வாறான சந்திரதேவனுக்குக் குளிர்ந்த நீர்த்திவலை கொண்டு அருக்கியங்கொடுப்பதுபோல அமைகிறது சிறியேன் எம்பிரானைக்குறித்து இவ்வாறு பாடியது.

சமுத்திரங்களுக்கெல்லாம் அதிபதியாக இருப்பவன் வருணதேவன். அந்த வருணராஜனுக்குக்குளிர்ந்த நீர்கொண்டு அபிடேகம் செய்து வழிபடுவதுபோல இருக்கிறதுஎளியேன் பாடிய பாட்டு.

அன்னை பராசக்தியே, நீயே வாக்கின் இறைவி. உனது அருளாலேயே அசைகிறேன், பேசுகிறேன், பாடுகிறேன். அதைத்தவிர என்செயல் [illegible] உண்டா? அன்னையே! உன் [illegible]குற்றத்துயாவ்வாடியேன் என்பது ஒருபோதும் ஒவ்வாது. எல்லாம் உன்செயலேயன்றோ! என்று அந்த மஹானே சொன்னார் என்றால், இறுமாப்பு இல்லாத எளிமை என்ற உண்மையே அதுவாம்.

இறைவனை வணங்கும் விஷயத்திலாயினும் நான் இறைவனைவணங்குகிறேன்என்றோ வணங்கி வரம்பெற்றுவிட்டேன் என்றோ எம்மிடம். இறுமாப்பு வருதல்தகாது அப்படி இறுமாப்புக் கொண்டு மாண்டவர்களே தட்சப்பிரசாபதி, இராவணன், சூரபதுமன் முதலானோர் ஆவர். இதனை அறிவுறுத்தவே "அவனருளாலே அவன்றாள் வணங்கி" எனக் கூறியருளினார் மணிவாசகர்.

இதனை உணர்ந்து சிறிது சிறிதாகப்பயின்று உய்தி பெறுவோமாக.




குறள் விளக்கம்

# களச் சாவு

— பொ. சண்முகநாதன் —

மரணத்தைக் கண்டு அஞ்சாதவர்கள்யார்இருக்கிறார்கள்? மரணத்தை வெல்லும் வழிபற்றியே சதா சிந்தித்துக்கொண்டிருக்கும் நம்மவர்கள் எப்படித்தான் அஞ்சாது இருப்பார்? ஆனால்வள்ளுவர் ஓரிடத்தில்சொல்லுகிறார் 'மரணத்தை இரந்தாவது பெறவேண்டும்' என்று!

அப்படியானால் வாழ வழி தெரியாது கோழைத்தனமாக மூன்று முழக் கயிற்றையோ நச்சுத் திராவகத்தையோ நாடும் கையாலாகாதவர்கள் பக்கமோ இந்த வள்ளுவர் என்று உங்களுக்குக் கேட்கத்தோன்றும். ஆனால் அந்த 'மரணம்' எப்படிப்பட்டது என்பதை வள்ளுவன் மேலும் விளக்குகையில் 'தன்னைக்காத்த தலைவன் கண்களில் நீர் சொரியுமாறு ஏற்படுகின்ற மரணம்' என்கிறார்.

இதன்படி பார்க்கப்போனால் மரணத்துக்கு அஞ்சாது தற்கொலை செய்பவர்களை அவர் குறிப்பிடவில்லை எனத் தெரிகிறதல்லவா? தற்கொலை செய்தவனைப் பார்த்து எந்தத்தலைவனும் இரும்பூதெய்திக் கண்ணீர் வடிக்கமாட்டான். மாறாக அவனை இகழத்தான் செய்வான்.

தலைவன் கண்களில் நீர் சொரியுமாறு சாகவேண்டுமானால் எப்படி? சதா நாடு, மொழி பற்றிய சிந்தனையிலும், நாட்டையும், மொழியையும் காக்கும் புனிதப் பணியிலுமாக ஈடுபட்டிருக்கும்தலைவனது கண்களில்நீர் சொரியுமாறு சாகவேண்டுமானால்-எப்படி?

தலைவனைப்போன்ற அதே சிந்தனையிலும் அதே பணியிலுமாகஈடுபட்டிருக்கும் ஒரு தொண்டன் தற்செயலாக மறைந்துவிட்டால் தலைவன் கலங்கத்தானே செய்வான்? நாட்டையும் மொழியையும் காக்கும் புனிதப் போரிலே தொண்டன் ஒருவன் இறந்துவிட்டால் தலைவன் அழத்தானே செய்வான்?

தலைவன் கண்கலங்கும்படியாகவும் கண்ணீர் விடும்படியாகவும் ஏற்படும் மரணத்தை வீரர்கள் இரந்தாவதுபெறவேண்டும் என்பது வள்ளுவரது கருத்து.

சாகவேண்டும், அதுவும் தன்னைக்காத்ததலைவன் கண்களில் நீர்சொரியும்படி சாகவேண்டும். அப்படி தலைவன் கண்களில் நீர் சொரியவேண்டுமானால் அவன் மகத்தான சேவையோ தியாகமோ செய்து புகழ்பட வாழ்ந்திருக்கவேண்டும். அப்படியான ஒரு சாவை வீரர்கள் விரும்பவேண்டும். ஏன் அதை இரந்தாவது பெறவேண்டும்.

மேற்படி கருத்தை உள்ளடக்கிய குறள் இதோ:-

புரந்தார்கண் நீர்மல்கச்
சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது
உடைத்து.


# ஹில்லேறி

(ஹில்-மலை; ஏறி)

1953-ல் இமயமலையின் உச்சியாகிய 'எவரஸ்ட்' சிகரத்தின் மீது, வெற்றியுடன் ஏறிய இரண்டு பேர்களில் ஒருவரின் பெயர் 'ஹில்(மலை)+ஏறி'; மலை ஏறுகின்றவர் என்று அவர் பிறந்தவுடனேயே பெற்றோர்களால் நாமமிடப் பெற்றது. எவ்வளவு பொருத்தமாய் இருக்கிறது.

'ஹில்லேறி' என்பதற்கு நேர் தமிழ்ப்பெயர் 'மலையப்பன்' எனலாம்.

— திருவாசகமணி



ST. ANTHONY'S HARDWARE STORES LTD
516, SKINNERS ROAD SOUTH, COLOMBO 10.
சென்ற். அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கினேர்ஸ் வீதி, தெற்கு,
கொழும்பு—10.
டெலிபோன்: 4261
4262.

# வழிகாட்டும் சிட்டுக்குருவி

'பறவையைக் கண்டான், விமானம் படைத்தான்; மீனைக்கண்டான், நீர்மூழ்கிக் கப்பலை உருவாக்கினன் மனிதன்!' தற்போதைய அணு சக்தி யுகத்திலும் மனிதன், இன்னும் பிராணிகளிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கிறது. இதை விஞ்ஞானிகளும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். தூரத்திலிருப்பதையும் இருந்த இடத்திலிருந்து அறியும் சக்தி பிராணிகளுக்கு உண்டு. பிராணிகளின் இந்த விசித்திரமான சக்தியைமனிதனும் 'காப்பி' அடித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

வானவெளி ஆராய்ச்சிக்காக முதன்முதலாக மேற்கு ஜெர்மனி விஞ்ஞானிகள், வியாழன் கிரகத்தைநோக்கி ஓர் ராக்கெட்டை ஏவிவிடப் போகிறார்கள். வியாழன் கிரகத்தை இந்த ராக்கெட் அடைய பலமாதங்கள்பிடிக்கும். இந்த ராக்கெட் பயணத்திற்கு 'வழிகாட்டுவது' சிட்டுக்குருவியாகும்! எப்படி? இரவில் சிட்டுக்குருவி நட்சத்திரங்களைக் கொண்டு வழி அறிந்து பறந்து செல்கிறது. இதைப்போலவே வெகுதொலைவில் உள்ள கிரகங்களுக்குச் செல்லும் நவீன ராக்கெட்டுகளுக்கு "சிட்டுக் குருவியின் கண்" போன்ற புதுமையான கருவி பொருத்தப்படும். குறிப்பிட்ட நட்சத்திரம் அல்லது கிரகத்தை குறி வைத்து ராக்கெட் செல்ல இது வழி காட்டும்.

பிராணிகளிடமிருந்து பலவற்றை மனிதன் ஏற்கனவே கற்றுக்கொண்டான். எனினும் பிராணிகளிடமிருந்து இன்னும் பல விசித்திரமான தொழில்நுட்பங்களை மனிதன் கற்றுக் கொள்ளலாம். குறிப்பாக பிராணிகளின் வழி அறியும் முறையைச் சொல்லலாம்.

கடலின் ஆழத்தை அறியும் கருவி, தற்போது கப்பல் போக்குவரத்துக்கு இன்றியமையாததாகி விட்டது. இக்கருவியின் உதவியினால் கடலின் ஆழத்தையும் கடல் படுகையின் தன்மையையும் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும். ஆனால் மனிதன் கப்பலை உருவாக்குவதற்கு முன்னர் கடலில் வாழும் திமிங்கில இனமீன் (டால்பின்) 'எதிர் ஒலி' முறையின்மூலம் கடலில்வழி அறிந்து சென்றுகொண்டிருந்தது. சமீபத்தில் பிரமாண்டமான தொட்டியில் இம்மீனை மிதக்கவிட்டு உன்னிப்பாக ஆராய்ந்தபோது, 'எதிரொலி' மூலம் நீரின் ஆழத்தையும் வழியையும் அறியும் முறையை இம்மீன் மனிதனுக்கு முன்னரே 'உருவாக்கி'ப் பயன்படுத்திவந்தது தெரியவந்தது.

இது மட்டுமா? ஐரோப்பாவில் பல இடங்களில் காணப்படும் 'பீட்டில்' எனப்படும் ஒருவகைக்குட்டி மீன்களுக்கும் இதே ஆற்றல் இருந்து வருகிறது. இம்மீன் அடிக்கடி நீரில் துள்ளிக்குதிக்கும், வட்டமிடும். இதைப்பார்த்தால், 'ஏதோ பைத்தியக்காரத்தனமான செயல்' என்றுதான்நினைக்கத் தோன்றும். ஆனால்அலைகளிலிருந்து கிளம்பும் எதிரொலியைக் கொண்டு இம்மீன் வழி தெரிந்து செல்கிறது. இக்குட்டி மீன்களின் கீழே காணப்படும் 'வால்'போன்ற உறுப்பில் சிறு சிறு மயிர்கள் இருக்கின்றன. இவை மிகவும் நுண்ணியமானவை. தான் செல்வதால் ஏற்படும் ஒலியை மற்றஒலிகளினின்று இம்மீன் வேறுபடுத்த முடியும்.

நைல்நதியின் ஆழத்தில் ஒருவித விசித்திரமான பிராணி வாழ்கிறது. ஏறத்தாழ இதற்குப் பார்வையே கிடையாதுஎனலாம். ஆனால் சேறும் சகதியும் கலந்த தண்ணீரிலும் 'மின்சார எதிரொலிகளை' உருவாக்கி இம்மீன் வழிதெரிந்து செல்கிறது. இதன் வாலின் இறுதியில் இரு புறங்களிலும் அமைந்துள்ள அவயவங்கள் 'ராடார்' சாதனம்போன்று மின்சார சமிக்ஞைகளை உண்டாக்குகிறது.

நீருக்கு அடியில் இம்மீன் உண்டாக்கும் 'மின்சார எதிரொலி'கள் பிரதிபலிப்பதைப் பொறுத்து இம்மீன் முன்னுக்கு அல்லது பின்னுக்குச் செல்கிறது. இரை எது, இடையூறு எது என்பதை இது எளிதில் புரிந்து கொள்ளும். இந்த விசித்திர 'மின்சார மீன்' உருவாக்கும்மின்சாரம் 500 வோல்ட் சக்தியுள்ளது. ஒரு மனிதனை அதிர்ச்சிக்குள்ளாக்கி வீழ்த்த இயலும். வழி அறிந்து கொள்ள இம்மீன் சுமார் 40 வோல்ட் மின்சாரசக்தியை உண்டாக்குகிறது.

இவ்விதம் 'மின்சார மீன்கள்' 'சில்' பிராணிகள்போன்றவைகளிடம் புதைந்துள்ள அபூர்வ சக்தியை துல்லியமாகத் தெரிந்து கொள்வதில் விஞ்ஞானிகள் இன்னும் வெற்றி பெறவில்லை.

தேனீக்களும், நீர்தெள்ளுப் பூச்சிகளும், ஒளியின் மூலம் வழி அறிகின்றன. புறுக்கள் வானம் இருண்டிருந்தாலும், வீடு தேடி திரும்பிவந்துவிடும். கரிய இருட்டிலும் வெளவால்கள் 'எதிரொலி' மூலம் வழிஅறிகின்றன. தான் அனுப்பிய ஒலி வேறுபாடடைந்து வருவதைக் கொண்டு, எதிரே இருப்பது என்ன? இரையா? அல்லது எதிரியா? அல்லது தடையா? என்பதைத் துல்லியமாகத்தெரிந்துகொள்ளுகின்றன. இப்பிராணிகளின் அபூர்வசக்தியைக்கண்டுவிஞ்ஞானிகள் வியக்கின்றனர்.

---

## வைத்திய ஒளி

# யானைக்கால் வியாதி

(சென்றவாரத்தொடர்ச்சி)

இந்நோயைக் குறைப்ப தென்றால் சதுப்பு நிலங்களிலுள்ள இடங்களின்மேல் D. D. T. முதலிய கிருமி நாசினிகளை அடித்து இந்நோயைக் குறைக்கலாம்.

சிகிச்சைக் கிரமம்

ஒரு வருடத்திற்கு மேற்பட்டால் அறுத்தெடுத்து விடுவதே நல்லது. வியாதியின் ஆரம்பத்தில் விரேசன ஔஷதங்கள் கொடுத்த பிறகு தாருட்யகாரி மருந்துகளை ஏற்றி காலைத் துணியால் சுற்றிக்கட்டி வைத்தால் வியாதி சீக்கிரத்தில் வளரமாட்டாது.

இரவு நேரங்களில்

போடும் லேபனம்

இரவு நேரங்களில் நோயாளியின் கால்களின் மேல்,

கடுகு-3 அவுன்ஸ், கத்தரி வேர்-3 அவுன்ஸ், முருங்கை வேர்-3 அவுன்ஸ்.

இவைகளை நன்கு தூள் செய்தபின்னர் அற்பேற்றி

— க. வேல்மணி —

எரித்த வேப்பம் எண்ணெயில் தூள்களைப் போட்டதன் பின்னர் லேபனமாக இரவு படுக்கைக்குப் போகும்பொழுது பூசிவிடவும்.

நன்கு விரேசன ஔஷதங்களை கொடுத்தல் வேண்டும்

(1) சிந்து வைங்காரி-3 குளிகை அல்லது,

(2) வாதரட்சகன்-3 குளிகை விதம் 1 மாதத்திற்கொருதரம் இஞ்சிச்சாற்றில் உரைத்துக் கொடுத்தல் வேண்டும்.

காலை, மாலை கொடுக்கும் மருந்துகள்

(1)பசுமூத்திரத்திற்கலந்த ஆமணக்கம் எண்ணெயைக் காலை மாலை] 1/2 அவுன்ஸ் பிரமாணம் கொடுத்து வரல் வேண்டும்.

(2) மாலை நேரங்களில் கெந்தக லேகியம் கொட்டைப்பாக்களவு கொடுத்தல் வேண்டும்.

கால்களைக் காலையில் கழுவும்

குடிநீர்

புளியமிலை-1 பிடி, வெட்டொட்டி-1 பிடி, கெந்தகம்-1 அவுன்ஸ் முதலிய வற்றை நன்கு நீர் விட்டு எரித்ததன் பின்னர் சுடச்சுடக்காலையில் காலைக்கழுவுதல் வேண்டும்.

நோயாளிக்குச் சாப்பிடக் கொடுக்கும் உணவுகளில் சுக்குப்பொடி பெருங்காயமும் சேர்த்துப் பாகம் செய்ததன் பின்னர் கொடுத்தல் வேண்டும்.

எப்பொழுதும்

வெளிப்பிரயோகமாக

உபயோகமாகும் சாறுகள்

ஊமத்தம் பட்டைச் சமூலம், நொச்சிச்சமூலம், ஆமணக்குச்சமூலம், சாறணைச் சமூலம், கறிமுருங்கை வேர்ப்பட்டை, கடுகு - 3 அவுன்ஸ்.

மேல் சொல்லப்பட்டவைகளை 1 பிடி வீதம் இடித்து நன்கு சூடுகாட்டிய பின்னர் வெளிப்பிரயோகமாக உபயோகிக்கவும்.

நோயாளிக்கு இரவு நேரங்களில் உண்டாகும் சுரத்திற்கு

நித்தியானந்த ரசத்தில் காலை மாலை 1 குளிகைவீதம் கஸ்தூரி மிருத்தியாதி அல்லது பெரிய கோரோசனை கொடுத்தல் நலம்.

எப்பொழுதும் சாப்பாட்டிற்குப் பின்னர் கொடுக்கும் மருந்து

நித்தியானந்த ரசம் - 2 அவுன்ஸ் பிரமாணம் வில்வமிலைச் சாற்றில் கலந்து கொடுத்தல்வேண்டும்.

எப்பொழுதும் நோய்வருவதைவிடவராமல்காப்பதே சிறந்தவழியாகும்.


வடமாகாணத்தில்

இரவு - பகல் சேவை செய்யும்

ஒரே ஒரு

ஸ்தாபனம்


உவாட் அன் டேவி

( ஆங்கில மருந்துச்சாலை )

148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.



அப்பாவின் ஆசை செல்வி, இளங் கன்றைப்போல் துள்ளி விளையாடுவதில் அவள் சளைப்பதேயில்லை....



நீங்களும் உங்கள் குழந்தைக்கு சுகம், பெலன், சந்தோஷம் யாவையும் அளியுங்கள்.

விறுவிறுப்பான வளர்ச்சிக்கும், தெளிவான கண்பார்வைக்கும், குழந்தையின் உடலுக்கு தேவையானது விட்டமின் A. உறுதியான பற்களுக்கும், திடமான எலும்பு வளர்ச்சிக்கும் விட்டமின் D அவசியம். கட்டான உடலமைப்புக்கும், மாசற்ற சருமத்திற்கும் விட்டமின் C அவசியம். தேவையான அளவுக்கு இவ்விட்டமின்களை உங்கள் குழந்தைகள் பெறுகின்றனவா என்று அறிந்திருக்க ஓர் நிச்சய வழி — அனுதினமும் குழந்தைகள் ஹலிபோரேஞ் அருந்துதலே. தடுமலையும் மற்ற தொற்று நோய்களையும் எதிர்த்துப் போராட ஹலிபோரேஞ்சில் காணப்படும் பாதுகாப்பளிக்கும் இம் மூன்று விட்டமின்கள் உடலுக்கு ஆயுள் முழுவதும் அத்தியாவசியம்.




திடமான, சீரான, சுகவளர்ச்சிக்கு

ஹலிபோரேஞ்

தயாரிப்பாளர்: கிளாக்ஸோ–அலன்பரீஸ் (சிலோன்) லிமிடெட் தபால் பெட்டி 23, கொழும்பு.


132/66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர் கதை (ஆங்கில மூலம்)

# சிறுபொறியும் வீட்டை எரிக்கும்

— திருமதி அ. மயில்வாகனம் —

முன்னொரு காலத்தில் ஐவன் என்னும்ஒருகுடியானவன் ஒருகிராமத்தில்வசித்து வந்தான். அவனுக்கு நன்ருக வேலை செய்யக்கூடிய மூன்று மக்கள் இருந்தனர். அவனும் கடுமையாகஉழைக்கக் கூடியவன். ஆகையால், அவன் செளகரியமாக வாழ்ந்து வந்தான். அவனுடைய மூத்தமகன் விவாகம் செய்துவிட்டான். இரண்டாம் மகன் விவாகம்செய்வதற்கு ஆயத்தமாய் இருந்தான். மூன்ருமவன் குதிரைகளை நன்கு பராமரிக்கக் கூடியவனுக இருந்தான். அவன் உழுவதற்குக் கற்றுக்கொண்டு இருந்தான்.

ஐவனுடைய மனைவி கவனமாகவும் விவேகமாகவும் வீட்டை நிர்வகித்து வந்தாள். அவனுக்குக் கடினமாக வேலை செய்யக்கூடிய அமைதியான ஒரு மருமகள் இருந்தாள். ஆகையால் ஐவனுடைய குடும்பம் சந்தோஷமாகஇருந்தது. அந்த வீட்டில் ஐவனுடைய தகப்பன் ஏழுவருஷங்களாக நோயாற் பீடிக்கப்பட்டு இருந்தான். அவனுக்கு நல்ல உணவு கொடுக்க வேண்டியிருந்தது.

ஐவனிடம் நான்கு குதிரைகள், ஒரு மாடு, பதினைந்து ஆடுகள் இருந்தன. வீட்டில் பெண்கள் குடும்பத்திற்கு வேண்டிய துணியை நெய்தனர். வயல்களிலும் அவ்வப்போது உதவி செய்துவந்தனர். ஆடவர் நன்கு நிலத்தைப் பண்படுத்தியிருந்தால், அவர்களுடைய தானியம்சொந்தத்தேவைகளுக்கு மேலதிகமாகஅடுத்த விளைவு காலம்வரையும் அதற்கப்பாலும் போதுமானதாக இருந்தது. பிற தேவைகளுக்காகவும் வரிப்பணம் செலுத்துவதற்காகவும் தேவையான தானியத்தை விற்றுப்பணங் கொடுத்தார்கள்.

அயல் வீட்டு கொடேயின் மகன் சொத்திக் கேபிரியல் ஐவனுடன் சச்சரவின்றி இருந்திருந்தால், ஐவனும் பிள்ளைகளும் மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருப்பர். கொடே உயிருடன் இருந்த காலத்திலும், ஐவனுடைய தகப்பன் குடும்பத்தை நிர்வகித்த காலத்தும், இரு குடும்பங்களும் ஒற்றுமையாக வசித்து வந்தனர். இரண்டுவீட்டுக்காரப்பெண்களுக்கும் பொதுவாக ஒரு பீப்பா அல்லது வைபிருக்கும் ஆடவர்களுக்கு பொதுவாக ஒரு விளக்கு இருக்கும். வண்டியில் ஒரு சில்லு முறிந்துவிட்டால்அதைத்திருத்துவதற்கு உதவியாக அயல் வீட்டார் வருவர். தற்செயலாக ஒருவருடைய கன்றுக்குட்டி அயல் வீட்டுத்தோட்டத்திற்குட்சென்றுவிட்டால்அதைச் சும்மா துரத்திவிட்டு இனிமேல் வரவிடவேண்டாம் என்று சொல்லுவார்கள். தோட்டக் கட்டிடங்களைப் பூட்டிவைப்பதோ, பொருள்களைஒருவரிக்கொருவர் காட்டாமல் ஒளித்து வைப்பதோ ஒருவரை ஒருவர் புறங்கூறி இழிவாகப்பேசுவதோ அந்த நாட்களில் அறியப்படாத விஷயங்களாய் இருந்தன.

தந்தையர் உயிருடனும் பலத்துடனும் இருந்தபோது குடும்பங்கள் இரண்டும் ஒற்றுமையாகஇருந்தன. மக்கள் குடும்பங்களுக்குத் தலைவர்களானதும் எல்லாம் மாற்றமடைந்துவிட்டன.

ஓர் அற்ப கருமம் நீடித்த தொந்தரவுகளையும் பணச் செலவுகளையும் உண்டாக்கியது

ஐவனுடைய மருமகளிடம் முட்டையிடும் கோழி ஒன்று இருந்தது. தபஸ் நாட்களை முன்னிட்டு அவள் முட்டைகள் சேகரிக்கத் தொடங்கினுள். அவளுடைய கோழி, அக்குடும்பத்தினர் வண்டிவிடும் குடிசைக்குட் சென்று வண்டிக்குள்ளே முட்டை இட்டு வந்தது. தினசரி அவள் ஒவ்வொரு முட்டையாக எடுத்துச் சேர்த்துக்

(10-ம் பக்கம் பார்க்க)

## தெரிந்து கொள்ளுங்கள்

— கு. இராஜகோபால் —

○ நாம் எமது அன்னையின் வயிற்றில் எவ்வளவு நாள் இருந்தோமென்று உங்களுக்குத் தெரியுமா? 270 நாட்கள், ஆம், ஒரு குழந்தை தன் தாயின் வயிற்றில் இருக்கும் காலம் இது.

○ நன்கு வளர்ச்சியடைந்த குளத்துத் தவளையின் நீளம் ஏறக்குறைய 6 அங்குலமாகும்.

○ பொதுவாக ஆண் தவளை பெண் தவளையை விடச் சிறியது.

---

விஞ்ஞான ஆசிரியர்: இந்த ஒரு ரூபாய் நாணயத்தை இந்த அஸிட்டுக்குள் போடப் போகிறேன். பணம்கரையுமா, கரையாதா?

ஒரு மாணவன்: கரையாது, ஸார். கரைவதாயிருந்தால் நீங்கள் பணத்தை அதனுள் போட மாட்டீர்களே.

— குமார் தனபால், நல்லூர்.

# சிறுவர் பூங்கா



## பட்டம்

பற்றிப் பிடிப்பவர் ஓர்புறமே—பட்டம்
பறக்க இழுப்பவர் மறுபுறமே
சுற்றிய நூலும் இதைவுறவே—பட்டம்
தூரப் பறக்குது பாருங்களே.

சட்டம் நிறைபோட்டுக் கட்டியதே—நல்ல
பட்டம் பறப்பதைப் பாருங்களே
எட்டப்போய் விண்ணினைத் தொட்டதுபோல்-
பட்டம்
ஏறி நிலைப்பதைப் பாருங்களே.

ஏற்றிட உதவிய நூலதுவே—பட்டம்
இறக்கிட வழிவகை செய்கிறதே
காற்றிடர் வந்ததும் பட்டமதே—சோர்ந்து
கவிழ்ந்து விழுவதைக் காணுங்களே.

மாற்றி அடித்திடும் காற்றதனுல்—பட்டம்
ஏற்ற முடியாது போய்விடுமே
நாற்றிசை வீசிடும் காற்றினிலே—பட்டம்
நன்நிலைப் பெய்யாது விண்ணினிலே.

ஏற்றி இறக்கிடும் வீரர்களே—பட்டம்
ஏறிட நல்லநூல் தேடுவீரே
காற்றில் இசைவையும் காணுவீரே—பட்டம்
கஷ்டமில் லாமலே ஏறிடுமே.

விட்டமது கட்டி ஏற்றுவீரே—அல்ல(து)
வெட்ட வெளிதன்னை நோக்குவீரே
பட்டமது கட்டி ஏற்றிடிலே—நல்ல
பருவ மிகுங்காற்றை நடுவீரே.

-அரியாலையூர் வே. ஐயாத்துரை

# குடும்பச் சுடர்

## நந்தமிழை நயமுடன் பாடிய நங்கை

— ஜீவா நாவுக்கரசன் —

"பொருப்பிலே பிறந்து
தென்னன் புகழிலே
கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை
யேட்டிலே தவழ்ந்த
பேதை
நெருப்பிலே நின்று கற்ருேர்
நினைவிலே நடந்தோ
ரேன
மருப்பிலே பயின்ற
பாவை மருங்கிலே
வளரு கின்ருள்"

பொதியில் அகத்தியன் அணைப்பிலே அவதரித்து பாண்டிய மன்னர்களின் உள்ளம் நிறைந்த ஆற்றலால்- ஆசையால் தென்னவன் புகழிலே பொலிவுற்று, மகிழ்வுற்று, சங்கப் பலகையிலே அமர்ந்து விளையாடி நீருக்கும், நெருப்புக்கும் நீங்கி நிலைத்து, கற்ருேர் நினைவிலே நின்று நீடு வாழ்ந்த கன்னித் தமிழ் பேதையைக் காதல் கொண்டவர்கள்-கட்டி மகிழ்ந்தவர்கள் புலமை மிக்க ஆண்கள் என்ருலும் இப்பேதையைப் பெண்களே பெரிதும் விரும்பினுர்கள் என்று தெரியவருகிறது. கன்னி என்ற காரணத்தால் அவளுக்குத் தாயாக இருந்து பேணிப் பெருவாழ்வு தந்த பெருமை பெண்களுடையதே, சீதை அழகில் சிறந்தவள் என்பதைச் சொல்லவந்த கம்பர் "பெண்களே மயங்கும் பேரழகு" என்கிருர். நங்கையர் நாடும் நந்தமிழ் மங்கையை, இனிமையும், இளமையும், எளிமையும் அமைந்த பைந்தமிழ்ப் பாவையை, புலமை மிக்க, அறிவு மிக்க பெண் புலவர்கள் போற்றி ஏற்றி வளர்த்தார்கள். இவ்வாறு தமிழைத்தாயாகக்கொண்டு சேயாகச் சேவை செய்தவர்களில் சிறந்தவர் காக்கை பாடினியார்.

இவரை 'நச்செள்ளையார்' என்றும் அழைப்பர். 'செள்ளையார்' என்ற சொல்லுக்குத் தாயார் என்று பொருளுண்டு 'தள்ளை' என்ற சொல்லே காலப்போக்கில் மருவி 'சள்ளை' என்றும், பின்னர் 'செள்ளை' என்றும் மாறிவிட்டது போலும். இவர் மலை நாட்டரசனிடமிருந்து பரிசு பெற்றதால் 'ந' என்ற சிறப்பெழுத்தையும் சேர்த்து "நச்செள்ளையார்" என்று அழைக்கப்பட்டார். இவருக்கு காக்கை பாடினியார் என்ற பெயர் சிறப்புப் பெயராகவே அமைந்திருக்கிறது.

"திண்டேர் நள்ளி கானத்
தண்டர்
பல்லா பயந்த நெய்யிற்
ருெண்டி
முழுதுடன் விளைந்த
வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ்
சிறிதென் ருேழி
பெருந்தோ ணெகிழ்த்த
செல்வற்கு
விருந்துவரக் கரைந்த
காக்கையது பலியே"
—(குறுந்தொகை)

இன்று எமது வீடுகளில் காக்கை கரைந்தவுடன் "யாரோ விருந்தினர் வரப் போகிருர்கள்" என்று சொல்லிவிடுகிருேம். சூரிய [illegible] மின் உதயத்தையும் மானிடருக்கு முன்னரே தன் சிறகடித்து அறிவிக்கும் ஆற்றல் சேவலுக்கு இருப்பதைப் போல, பட்ட மரங்களெல்லாம் எப்படியோ ஒரு நாள் திடீரென இளந்தளிர்கள் தந்து வசந்தம் வந்துவிட்டதை அறிவிப்பதைப்போல விருந்தினர் வருகையை அறிவிக்கும் ஆற்றல் காக்கைக்கு உண்டு. தன்னுடைய கணவனைப் பிரிந்து ஆருத-மாருத-மீளாத துயரத்தால் துடித்துப் புலம்பிக்கொண்டிருந்த நச்செள்ளையாருக்கு ஒரு காக்கை கரைந்து அவரின் கவலை எல்லாவற்றையும் போக்கிவிட்டது. யாராலும் ஆறுதலும், அமைதியும் கூற முடியாத அவருக்கு அந்தக் காக்கை செய்த உதவி ஞாலத்திலும் பெரியதுபோல இருந்தது. வெந்தணலாய் வேகவைத்த வேதனையை- துரும்பாய் துடிக்கவைத்த துயரத்தையெல்லாம் போக்கடித்த, விருந்துவரக் கரைந்த அந்தக் காக்கைக்கு 'பராக்கிரமம்' வாய்ந்த நள்ளி மன்னனின் காட்டிலே உள்ள எல்லாப் பசுக்களின் நெய்யில், தொண்டி நாட்டில் விளைந்த வெண் நெல்லின் சுடுசோற்றைக் கலந்து, ஏழு பாத்திரத்தில் ஏந்திஞலும் அது சிறிதாகும். ஆனுல் காக்கை செய்த சேவையோ அளப்பரிது என்று காக்கையைப்

(10-ம் பக்கம் பார்க்க)



இப் பூச்சித்திரத்தைக் கவுணின் நெஞ்சுப் பகுதியில் அமைத்தால் அழகூட்டும்.
- செல்வி கோ. சிவஞானவதி

## பேரிச்சப்பழ இனிப்பு

தேவையான பொருட்கள்:-

1/2 ரூ. குறுனல் (றவ்வை)
1 ரூ. சீனி
1 ரூ. பேரீச்சம்பழம்
2 கோப்பை தேங்காய்ப்பால்
50 கஜுகொட்டை
1/4 ரூ. முந்திரிகை வற்றல்
வனிலா

செய்யும் முறை:-

தேங்காய்ப்பாலையும் சீனியையும் காய்ச்சவேண்டும். கொதித்துவரும்பொழுது பேரீச்சம் பழத்தையும் போட்டுக் காய்ச்சவும். தடித்து வந்தவுடன் குறுனலையும், கஜுகொட்டையையும் போட்டுக்கிண்ட வேண்டும். தடிப்பாய் வந்தவுடன் வனிலாவையும் கொஞ்சம்விட்டு இறக்கி பட்டர்பூசிய தட்டில் இட்டு சதுரங்களாக வெட்டி ஓயில் பேப்பரில் சுற்றவும்.

—செல்வி இறஞ்சனு. கந்தசாமி

## வாடா மலர்கள்

(செல்வி. அ. இலட்சுமிதேவி)

1. வருவாய்க்குத் தக்க வாழ்க்கைஇல்லாதபொழுது செல்வராவார் ஒருவருமிலர். அது உள்ள பொழுது வறியவராவார் மிக அரியர்.

2. நமது வாழ்க்கையில் மைற் கற்கள் மாதிரிச் சில சில சந்தர்ப்பங்கள் உண்டு. அவை கழிந்துபோன ஒரு பாகத்தைக் குறிப்பதோடு, இனி நாம் செல்லவேண்டிய புதிய வழியையும் காட்டுகின்றன.

3. ஒழுக்கமளிப்பது, மனோவலிமை தருவது, புத்தியை விசாலிக்கச் செய்வது, ஒருவனை தன் வலிமைகொண்டு நிற்கச் செய்வது ஆகிய இத்தகைய கல்வி நமக்கு வேண்டும்.

4. நீ வேலை செய்யும்போது கதியற்றவன்போலச் செய்யாதே. பிறர் உன்மேல் இரங்கவேண்டும் என்ருவது அல்லது உன்னைப் போற்ற வேண்டும் என்ருவது செய்யாதே. பொது வாழ்விற்குத் தக்கதைச் செய்வதிலும், தகாததைச் செய்யாது இருப்பதிலுமே உன் மனம் செலுத்தப்படவேண்டும்.

5. உனக்கோ மற்றவர்களுக்கோ நல்லது செய்வதற்காகத்தவிர வேறெதற்கும் செலவு செய்யாதே.

6. சிறு விஷயங்களுக்காக மனங் குழம்பாதே. சாமானியமான விபத்துக்களையும் தவிர்க்க முடியாத இடையூறுகளையும் கண்டு மனங் கலங்காதே, அமைதியாகவே இரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வழிபாடு

— செ. நடராசா —

கோலமயில் ஏறிக் கையில் திருவேல் தாங்கி அடியார் உள்ளங்களில் என்றும் இளையவனாக-அழகியவனாக வீற்றிருக்கும் முருகப்பிரான் தான் குறும்புசெய்து வேடிக்கை காட்டி அன்பர்களைச் சோதிக்க வைப்பதில் கைதேர்ந்தவனல்ல. முருகனுக்கு முன்வந்த தொந்திக்கணபதியாம்விநாயகப்பெருமானும் இக்கலையில் வல்லவர்தான். கோலக்குமரனின் விளையாடல்களை ரசித்துமகிழும் அன்பர்கள் விநாயகப்பெருமானது திருவிளையாடல்களைப் போற்றிப் புகழ்வதில் அக்கறை காட்டுவதில்லை.

விநாயகப்பெருமானும் 'பிள்ளைவன் பெற்ற செல்வம் அடியேன் நான் பெற்றதன்றோ!' என்று எண்ணி பெருந்தன்மையோடு பேசாதிருக்கிறார். கனி வர்க்கங்களையும், அப்பமோடு அவல் பொரி, மோதகம் இவற்றை வயிறார உண்டுவிட்டு தானுண்டு; தனது எலி வாகனமுண்டு என்று நிம்மதியாக இருக்கிறார்!

விநாயகப்பெருமான் எப்படிப்பிறந்தார் என்று எடுத்துரைப்பதிலேயே நிறையக் கருத்து வேறுபாடுகளுண்டு. விநாயகருக்கு யானைமுகம் எப்படி ஏற்பட்டது என்பதைக்குறித்தும் சர்ச்சைகள் நிறைய உண்டு.

இறைவனுக்கும் உமை அம்மைக்கும் விநாயகக் குழந்தை பிறந்திருக்கிறது என்பதை அறிந்த சனிபகவான் குழந்தையைப் பார்த்துவரச் சென்றார். குழந்தையின் முன்னே தலை குனிந்து நின்றார். இதைக் கண்ட உமையம்மை, 'குழந்தையைப்பார்க்கவந்து இப்படித்தலைகுனிந்து நிற்கலாமா?' எனச்சனிபகவானை வினவினாள்.

'உலகமாதாவே! என்னை மன்னிக்கவேண்டும். எனது பார்வையில் அகப்பட்ட எப்பொருளும் எரிந்து சாம்பலாகக்கடவது' என என் மனைவி எனக்குச்சாபமருளியுள்ளாள். நான் குழந்தையைநிமிர்ந்து ஏன்பார்க்கவில்லை என்பதை இப்பொழுது புரிந்துகொண்டிருப்பீர்கள்' எனவினயத்துடன் பதிலிறுத்தார் சனிபகவான்.



அறிஞர் கி. வா. ஜகந்நாதன் தம்பதிகள் 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விஜயம் செய்தபோது 'ஈழநாடு' நிர்வாக ஆசிரியர், நிர்வாக அதிபர் மற்றும் ஊழியர் சிலருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

உலகமாதாவாகிய உமையம்மை இதைக் கேட்டுச் சிரித்தாள்.

அந்தச் சாபமொன்றும் இங்கே பலிக்காது; இது சிவகுடும்பம்; தைரியமாக நிமிர்ந்து குழந்தையைப் பாரும்' என்று உற்சாகமூட்டினாள் உமையம்மை.

சனிபகவான் உலகமாதாவின் பேச்சை மறுக்காமல் குழந்தையை நிமிர்ந்து பார்த்தார்.

அவ்வளவுதான்!

விநாயகக் குழந்தையின் தலை நீறாகிவிட்டது.

இந்த விஷயம் காட்டுத்தீபோல் மளமளவென்று எங்கும் பரவத் தொடங்கியது.

அப்பொழுது குழந்தையைப் பார்க்கவந்து கொண்டிருந்த பிரமதேவர் விஷயத்தையறிந்து, தாம்கண்ட யானைத்தலையொன்றைக் கொண்டுவந்துகுழந்தையின் உடம்பிலேஒட்டவைத்தார். குழந்தை கரங்களை அசைத்து விளையாடத் தொடங்கியது.

யானை முகனின் தோற்றம் பற்றி இப்படியொரு கதை.

திருஞானசம்பந்தர் அருளிய ஒரு தேவாரம் இன்னொரு கதையை நமக்குத் தெரிவிக்கிறது.

சிவனும் உமையும் நந்தவனமொன்றிற்குச் சென்றார்களாம். வண்ணமலர்களின் வடிவழகிலும் தண்தென்றலின் இனிமையிலும் மயங்கி நிற்கும்போது, எதிரே ஆண் யானையும் பெண்யானையும் சேர்ந்து மகிழ்ந்திருத்தலைப் பார்த்து தாமும் அவ்வாறே இருக்கவிழைந்து உருமாறினார்கள். அக்கணத்திலே உதித்தவர்தான் விநாயகர் என்பதைச் சம்பந்தர்தேவாரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

பிடியதனுருவுமை கொள
மிகுகரியது
வடிகொடு தனதடி வழி
படுமவரிடர்
கடிகணபதி வரவருளினன்
மிகுகொடை
வடிவினர்பயில் வலிவல
முறை யிறையே

இவ்வாறுஒருசாரார் விநாயகப்பெருமானின் தோற்றம்பற்றி ஆராய்ந்து செல்கையில் பிறிதொருசாரார் விநாயகப்பெருமான் ஆரியக் கடவுளா அல்லது தமிழர் தெய்வமா என்ற சர்ச்சையில் ஈடுபட்டுள்ளனர்.

'மாணிக்கவாசகர் காலம்' என்னும் நூலில் மறைமலையடிகள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

'திருமூலர் திருமந்திரத்திலும்; அவர்க்கு முற்பட்ட மாணிக்கவாசகர் திருவாசகந் திருக்கோவையாரிலும்; அவர்க்கு முற்பட்டசங்கத் தமிழ்நூல்களிலும் யானைமுகக்கடவுளாகிய பிள்ளையாரைப்பற்றியகுறிப்பாதல் எங்குமெட்டுணையும் காணப்படாமையின் அந்நூல்கள் தோன்றிய காலங்களிற்பிள்ளையார் வணக்கம் இத்தமிழ்நாட்டின்கண் உண்டாகவில்லையென்பது தெளியப்படும். அப்பர், திருஞானசம்பந்தர் அருளிய தேவாரங்களிற் பிள்ளையாரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுதலின், கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே யானைமுகக்கடவுள் வழிபாடு இத்தென்றமிழ் நாட்டின்கண் உளதாயிற்றென்று துணிக'

இவ்வாய்வுரையையும், ''கடைச்சங்க காலத்திலே தமிழ்மக்கள் வடநாட்டிலிருந்து ஆரியராற் கொண்டு வரப்பட்ட [illegible] ளின் வழிபாட்டையுங் கைக்கொண்டனர். புத்தம் முதலிய பிற சமயங்களுக்கும் தங்கள் நாட்டில் இடங்கொடுத்துச் சமயப்பொறுமையை மேற்கொண்டனர். இராமாயண பாரதக்கதைகள் தென்னாட்டிற்பரவின'' என ''இலக்கிய வரலாறு'' என்னுந் தமது நூலில் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்களின் கூற்றையும் வைத்துக்கொண்டு, விநாயகப்பெருமான் ஆரியர்களால் சிருஷ்டிக்கப்பட்ட தெய்வமேஎன ஒரு சாரார் ஆணித்தரமாக வற்புறுத்துவர். இவ்வாறு எதிரும் புதிருமாக நம்மவர்கள் தாமெடுத்துக்கொண்ட வாதத்திற்கு ஆதாரங்கள் தேடும் முயற்சியில் ஊறிநிற்கும்போது, 'ஹராஸ்' என்ற மேனாட்டறிஞர் கணபதித்துவத்தைப் பற்றி தமது கருத்தை அழகாகவெளியிட்டுள்ளார்கள்.

''உலகம் இயங்குவதற்காகக் கடவுள் ஞானசக்தியைப் படைத்துக்கொண்டார். அந்தமுதற்படைப்பே வாக்கு. வாக்கின் முதல்நிலை ஓம் என்ற பிரணவம். பிரணவத்தின் காட்சி வடிவமே பிள்ளையார்'' இந்த மேனாட்டறிஞரின் வாக்கையும் நம்மவர்களின் போக்கையும் நினைக்கும்போது வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

விநாயகப் பெருமானின் தோற்றம் பற்றிய இன்னும் பல கதைகளையும், அவர் எச்சாதியத்தாருக்குரியவரென்ற கருத்து வேறுபாடுகளையும் உற்று நோக்கும்பொழுது, பிள்ளையார்என்ற பெயர் விநாயகப்பெருமானுக்குப் பொருத்தமானதென்றே தோன்றுகிறது. பிள்ளையாரைப் பற்றிப் பிற்காலத்தவர் வாதப்பிரதிவாதங்களில் இறங்கட்டும். அதனாலேவிநாயகப் பெருமானுக்கு செல்வாக்கு அதிகரிக்கட்டுமெனநினைத்த ஒரு பக்தர் கணபதிக்குப் 'பிள்ளையார்' என்ற பெயரைச் சூட்டினாரோ என்னவோ!

விநாயகர் வழிபாடு என்னுமிக்கட்டுரையில் பிள்ளையாரைப் பற்றிய சிறிய ஆய்வுக்கு இடமளித்ததின் நோக்கம் அவரது தோற்றம் பற்றிய செய்திகளே பெரிய திருவிளையாடல்களாக இருப்பதனாலேயே! விநாயகரின் விளையாட்டுக்கள்சிலவற்றை இனிக்கவனிப்போம்.

ஒருமுறை தந்தையாகிய சிவபெருமானுக்கும் தாயாகிய உமாதேவியாருக்கும் நடுவில்விநாயகப்பெருமான் வீற்றிருந்தாராம். 'செல்வா ஒருமுத்தந்தா! கண்ணேஒரு முத்தந்தா' என இறைவனும் இறைவியும் விநாயகரைக் கெஞ்சினார்களாம்; இருவருக்குமே முத்தந்தருவதைப் போல விநாயகப்பிள்ளை போக்குக்காட்டிவிட்டு திடீரெனஎழுந்துவிலகிச்சென்றுவிட்டாராம். முத்தத்திற்காகத் தம்மை இரந்தவர்கள் தாமே முத்தங் கொள்ளும் வேடிக்கையைப் பார்த்து விநாயகக்குழந்தை சிரித்ததாம். நந்திக்கலம்பகத்திலே உள்ள கடவுள் வாழ்த்துப் பாடல் இச் செய்தியைக்கனிவுறத் தெரிவிக்கிறது.

மும்மைப் புவனம்
முழுதீன்ற
முதல்வியோடும்
விடைப்பாகன்
அம்மை தருக முத்தமென
அழைப்ப ஆங்கே
சிறித கன்று
தம்மின் முத்தம்
கொளநோக்கிச்
சற்றே நகைக்கும்
வேழமுகன்
செம்மை முளரி
மலர்த்தாள் எம்
சென்னி மிசையிற்
புனைவாமே.

இவ்வாறுவேடிக்கைசெய்த பச்சைக்குழந்தையாகிய விநாயகர் ஒருபோட்டியிலே மாம்பழப் பரிசு பெற்றார்! அதியற்புத மாங்கனியொன்றை நாரதமுனிவரிடமிருந்து பெற்ற சிவபெருமான் அக்கனியை தம்புதல்வர்களாகிய விநாயகர், சுப்பிரமணியர் ஆகியவர்களில் யாருக்குக் கொடுப்பதென்று அறியாது திகைத்தார். 'அப்பா எனக்குத்தான் மாங்கனி வேண்டும்!' 'மாங்கனியை எனக்குக் கொடுங்களப்பா!' என இரு புதல்வர்களும் சண்டைபோட்டார்கள். இறுதியில் சிவபெருமான் ஒரு போட்டியேற்படுத்தினார். 'யார் உலகை முதலில் சுற்றிவருகிறார்களோ அவர்களுக்கே மாங்கனி' என, பெருமான் அறிவித்தார். 'இதோ' என்று கூறி வேலவன் மயில் ஏறிப் பறந்தார். தொந்தி பருத்த விநாயகக்குழந்தை மெதுவாகத் தந்தையையே வலம் வந்து மாங்கனியைத் தட்டிக் கொண்டு போய்விட்டது!

அக்கனிதரச்சொலிமுன்
அப்பனை வலத்தில் வரும்
கைக் கஜமுகக் கடவுள்
காப்பு!

விநாயகர் செய்த வேடிக்கையில் இன்னுமொன்றைப் பார்ப்போம். இவ்விளையாட்டைச் சிவப்பிரகாசசுவாமிகள் தெள்ளத் தெளிந்த தமிழில் சுவைபட எடுத்தோதுகிறார்.

'அரனவனிடத்திலே
ஐங்கரன் வந்து நின்
ஐய! என் செவியை
மிகவும்
அறுமுகன் கிள்ளினன்
என்றே சிணுங்கிடவும்
அத்தன் வேலவனை
நோக்கி
விரைவுடன் வினவவே
'அண்ணன் என்
சென்னியில்
விளங்கு கண்
எண்ணினன்' என
வெம்பிடும் பிள்ளையைப்
பார்த்து நீ அப்படி
விகடம் ஏன்
செய்தாய்? என
மருவும் என் கை நீளம்
முழம் அளந்தான்'
என்ன
...........''

குழந்தைகள் சண்டை எப்படியிருக்கிறது?

இவ்வாறு வேடிக்கைகள் செய்து மகிழ்ந்து வந்தவருக்கு ஒருமுறை திருட்டுப் பட்டத்தைப் புலவரிருவர் சூட்டிவிட்டனர்.

இரட்டையர்களெனப் போற்றப்படும் புலவர்களொருமுறை பிள்ளையார் கோவிலிலே தூங்கும்பொழுது ஒரு திருடன் அவர்களுடைய முடிச்சை அவிழ்த்துப் பணத்தைத் திருடிவிட்டான், விழித்தெழுந்து

(11-ம் பக்கம் பார்க்க)

## சிறுபொறியும்,..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தான். ஒருநாள் வீட்டுக் குழந்தைகள் அக்கோழியை விரட்டிவிட, அதுபயத்தினால் வேலிக்குமேலாகப் பறந்து அடுத்த வளவுக்குள் முட்டையிட்டது. அதுகொக்கரிக்கும் சத்தம் ஐவனுடையமருமகளுக்குக்கேட்டபோதும் அவள் கைக்காரியத்தை முடித்துக்கொண்டு போக எண்ணி, 'எனக்கு இப்போ நேரமில்லை, ஞாயிற்றுக்கிழமைக்காகநான் வீட்டைத் துப்புரவாக்க வேண்டும். முட்டையைப் பின்னர் எடுக்கலாம்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள்.

வேலையை முடித்துக்கொண்டு தன் மாமியாரையும் மைத்துனரையும் முட்டையெடுத்ததா வென்று விசாரித்தாள். ஏனெனில் சாயங்காலம் அவள் வண்டிக்குட்சென்று பார்த்தபோது அங்கே முட்டையிருக்கவில்லை. அவர்கள் தாங்கள் எடுக்கவில்லை என்றார்கள். ஆனால் அவளுடைய இளைய மைத்துனன் ராஜூல் சொன்னான்; 'உன்கோழி அடுத்த வளவுக்குட்தான் முட்டை இட்டது, அங்கேதான் அது கொக்கரித்தது, பின்னர் அது வேலிக்கு மேலாகப் பறந்து இங்கே வந்தது.'

அவள்போய்க்கோழியைப் பார்த்தாள். அது தன் குஞ்சுகளுடன் நித்திரை செய்வதற்காக ஆயத்தமாகக் கண்மூடிக்கொண்டிருந்தது.

பின்னர் அவள் அயல் வீடு சென்று கேபிரியலுடைய தாயைச் சந்தித்தாள். பிறகு அவள் வந்ததை நோக்கி 'உனக்கு என்ன வேணும் இளம்பெண்ணே?' என்று வினவினாள். பதிலுக்கு ஐவனுடைய மருமகள், 'பாட்டி இன்று காலமே என் கோழிகளில் ஒன்று உங்கள் வீட்டுக்கு வந்தது. அது ஒரு முட்டை இடவில்லையா?', என்று விசாரித்தாள்.

(தொடரும்)

## நந்தமிழை...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

புகழ்ந்து பாடியபடியால் இவர் காக்கை பாடினியார் என்று அழைக்கப்பட்டார். தம்மை நோக்கிவரும் விருந்தினரை அகமும் முகமும் மலர, நாள்தோறும் வரவேற்றுப் போற்றுகிறவருடைய வாழ்க்கை துன்பத்தாலும் துயரத்தாலும் வருந்திக் கெட்டுபோவதில்லை, இதையே,

''வருவிருந்து வைகலும்
ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல்
இன்று''

என்று தமிழ்மறை பேசுகிறது. தலைவனைப் பிரிந்த மாதர் ஏழைகளுக்கு இரங்கி விருந்திடுதலாலும், உற்றார் உறவினர் வேண்டியவர்களுடன் உண்டு, கண்டு வாழ்வதாலும் தம் துன்பத்தை ஒருவாறு போக்கிக்கொள்வர்.

இவர் பதிற்றுப்பத்தில் ஆருவது பத்தைப் பாடி, ஆடு கோட்பாட்டுச் சேரலாதனிடமிருந்து ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பரிசு பெற்றார் என்று அறியக்கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கந்தோர்ச் சேவகர் தேவை

இரணைமடு மேற்கு ப. நோ. கூ. சங்கத் தலைவரால் கந்தோர்ச்சேவகர்க்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பகாரர் சந்தோரில் இலிகிதராகவும் கடமையாற்றக் கூடிய தகுதியுடையவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால்மூலம் ''தலைவர், இரணைமடு மேற்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்'' என விலாசமிடப்பெற்று 9-9-66க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

தராதரம்:- ஜே. எஸ். ஸி. (J. S. C.) தராதரப்பத்திரம் பெற்றவர். கூட்டுறவுப் பயிற்சியிருப்பின் முதல் இடம் கொடுக்கப்படும்.

வயது:- 18 தொடக்கம் 25 வரையும்.

பிணை:- உரொக்கம் ரூபா 250-00

சம்பளம்:- ரூபா 90-00 எல்லாம் உட்பட.

இங்ஙனம்,
க. கணேசதாசன்,
நிர்வாகக் காரியதரிசி

948


## பௌத்த விகாரைக்கு பிள்ளையார் விஜயம்

அம்பாறை, திங்கள்

அம்பாறையிலுள்ள பிள்ளையார் கோவில் முதல் ரத உற்சவம் அண்மையில் நடைபெறவிருக்கின்றது. ஊர்வலத்தின் போது அம்பாறை பௌத்தவிகாரைக்குப் பிள்ளையார் அரோகணித்து வரும் ரதம் கொண்டு செல்லப்படும். பௌத்த விகாரையிலும் பிள்ளையாருக்கு பூசைகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## தெல்லிப்பழை கி. ச. உபதலைவர்

தெல்லிப்பழை, திங்கள்

தெல்லிப்பழை கிராமசபையின் உபதலைவராக திரு. க. கிருஷ்ணபிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப் பதவிக்கு 11-ம் வட்டார அங்கத்தவர் க. கிட்ஷ்ணபிள்ளையும் போட்டியிட்டனர். திரு. கிருஷ்ணபிள்ளை எட்டு மேலதிக வாக்குகளால் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானுடன் மலேஷிய தொடர்பு

கோலாலம்பூர், ஆக. 29

பாகிஸ்தானுடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்த மலேஷிய அரசாங்கம் தயாராகவுள்ளதென்றும் ஆனால் அது பாகிஸ்தானையே பொறுத்துள்ளதென்றும் மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானும் மலேஷியாவும் சென்ற வருடம் தமது தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டன.

(பி டி ஸி)

## விநாயகர் வழிபாடு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்த புலவர்கள் பணத்தைக் காணாது வருந்தினர். புலவர்களுக்கு என்னதோன்றிற்றோ. பழியைப் பிள்ளையார்மேல் சுமத்தி; 'உறவினர்கள் அத்தனைபேருமே திருடர்கள்; அந்தத் திருட்டுப் புத்தி இவரைவிட்டு நீங்குமா என்ன?' என்று நேருக்கு நேர் கேட்டும்விட்டார்கள்!

'தம்பியோ பெண் திருடி
தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடும்
மாமாயன்-அம்புவியில்
மூத்தபிள்ளையாரே! முடிச்
சவிழ்த்தீர்; போமோ
கோத்திரத்துக்குள்ள
குணம்!

புலவர்களளித்த இப்பட்டத்தைக் கேட்டுப் புன்னகை புரிந்தார் விநாயகர். இன்னும் பல விளையாடல்கள் புரிந்துள்ளார் விநாயகர். அவைகளைத் திருப்புகழ்,

'முத்த மிழடை வினை
முற்படு கிரிதனில்
முற்பட வெழுதிய
முதல் வோனே
முப்புர மெரிசெய்த
அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த
அதிதீரா
அத்துயரது கொடு
சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை
யிபமாகி
அக்குறமகளுடன் அச்சிறு
முருகனை
அக்கண மணமருள்
பெருமாளே''

எனக் குறிப்பிடுகின்றது.

எது எவ்வாறிருப்பினும் பண்டுதொட்டு இன்றுவரை விநாயகரது வேடிக்கைச் செயல்களுக்காகமட்டுமில்லாமல், அனுக்கிரகிக்கும் பெருமைக்காகவும் தமிழ் மக்கள் விநாயகரைப் போற்றிப் புகழுவர். என்ன செய்தாலும் அவருக்குக் கௌரவமாக முதலிடமளிப்பர்.

இத்தனைப் பெருமை விநாயகரை நமது ஔவை மூதாட்டி ஒரு சிறு பண்டமாற்றுக்கழைத்து அவரை ஏமாற்றிவிட்டாரென்றுல் வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

''பாலுந் தெளிதேனும்
பாகும் பருப்பு மிவை
நாலுங் கலந்துனக்கு
நான் தருவேன்'

என்று ஔவையார் கூறி, அதற்கு ஈடாக,

'சங்கத் தமிழ் மூன்றும் நீ எனக்குத்தா' என அவாவுறுகின்றார்.

பாட்டியின் வியாபார தந்திரத்தை நினைந்து விநாயகர் மனத்துள் சிரித்திருப்பார் இல்லையா?


# வரிவிளம்பரம்

## தேவை

பெண் கொம்பசிட்டர்கள்

கொம்பஸிட்டர்களாகப் பயிற்சிபெற விரும்பும் பெண்கள் தேவை. மனுச்செய்க. ஆங்கில அறிவு விசேஷ தகைமையாகக் கணிக்கப்படும். செப்டெம்பர் 15-ம் திகதிக்குமுன் மனுச்செய்க. விளம்பர இல. 900, ஈழநாடு மே/பா என எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 900

## வைத்தியம்

நோய்வு, கசம், நீரிழிவு, ஏந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் வயி பூரணானந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## காணவில்லை

திறப்புக்கோர்வை:

திறப்புக் கோர்வை ஒன்று காங்கேசன் துறைக்கும் யாழ்ப்பாண டிஸ்ரிக் கோட்டுக்குமிடையில் 28-8-66 காலையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்தால் சன்மானம் கொடுக்கப்படும். 1210

## கல்வி

வகுப்புக்கள்

கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் G. C. E. (சாதாரணம்-உயர்நிலை), பல்கலைக்கழகப்புகுமுகத்தேர்வு ஆதியாம் பரீட்சைகளுக்குரிய வகுப்புக்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடைபெறுகின்றன. புதிய வகுப்புக்கள் 2-9-66ல் ஆரம்பமாகும். பாடசாலைக்குச் செல்லும் மாணவ மாணவியர்க்கு மாலையில் வகுப்புக்கள் நடைபெறும். ஆய்வுகூட வசதி (Laboratory) எல்லா வகுப்புக்களுக்கும் உண்டு. பாடங்களிற் குறைவாயிருக்கும் பிள்ளைகளுக்கு விசேட பயிற்சிஅளிக்கப்படும். விடுதி வசதிகளும் உண்டு. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 304/3, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். 898



## தமிழ் நாடக எழுத்துப் போட்டி 1966

முடிவுத் திகதி 15-9-66

செயலாளர்,
இலங்கைக் கலைக்கழகம்,
135, தர்மபால
மாவத்தை,
கொழும்பு—7 947


## கெற்பலி கொலை முயற்சி வழக்கு

சாவகச்சேரி திங்கள்

கெற்பலி கொலை முயற்சி வழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில், இவ்வருடம் ஏப்ரல் மூன்றாந் திகதி சின்னத்தம்பி, ஜயாத்துரை, குமாரவேலு, கந்தசாமி (கிராம சேவையாளர்) ஆகிய நால்வரும் கெற்பலியைச் சேர்ந்த க. கந்தையா. ஆ. பாலசிங்கம், த. துரைசாமி ஆகியோரைக் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றம் சாட்டபட்டுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இ. சதாசிவம், வி. தர்மலிங்கம், தி. பரந்தாமன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.


## நெல்லியடிப் பட்டினம் கேள்வி விளம்பரம்

1966-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14-ந் திகதி 8-00மணிவரைகீழ்க்காணும் வேலைகளுக்கு, நெல்லியடிப் பட்டின விசேஷ ஆணையாளராலிபதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அங்கீகரிக்கும் சின்கைவைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றிற்கும்கேள்விப் பிணைப்பணம் ரூபா 25/-ம் பத்திரப்பணம் ரூபா 5/-ம் செலுத்தியதின் பேரில் 12-9-66 முற்பகல் 11-30 மணிவரை விசேஷ ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். ஏனைய விபரங்கள் நெல்லியடிப்பட்டின விசேஷ ஆணையாளரின் அலுவலகத்தில், பணிபுரியும் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

சி. சி. மாணிக்கவாசகர்,
விசேஷ ஆணையாளர்.

விசேஷ ஆணையாளர்
அலுவலகம்,
நெல்லியடிப் பட்டினம்,
கரவெட்டி,
28-8-1966.

### வேலைகள்

1. அரசடிபுலவராவோடை ரோட்டுக்கு இரண்டாம் முறைதார் ஊற்றுதல்.
2. ஞானசாரியார் ரோட்டு மதவுத்திருத்தம்.
3. வேறெண்டை சுடலை ரோட்டுக்கு கல்லுப்பதித்துத் தார் ஊற்றுதல்.
4. கொல்ல தெரு அமைத்தல்.
5. சரஸ்வதி வித்தியாசாலை வீதிக்குக் கல்லுப் பதித்துத் தார் ஊற்றுதல்.
6. வண்ணான்துறை சனுலிக வீதிக்கு கல்லுப்பதித்துத் தார் ஊற்றுதல்.
7. கலட்டி ரோட்டுக்கு இரண்டாம்முறை தார் ஊற்றுதல்.
8. கிரிப்பல்லி வீதி அமைத்தல்.
9. ஆலங்கட்டைச் சுடலையில் ஓர் மடம் அமைத்தல்.
10. ஆலங்கட்டைச் சுடலைக்கு முள்ளுக்கம்பி அடித்து கேற் (Gate) போடுதல்.

952



## இரண்டாவது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
வெலிங்டன் விஜயா ஸ்ரீகிருஷ்ணா
(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு) (திருமலை)



ரி. எம். சௌந்தரராஜன்
பி. எஸ். சரோஜா
எம். ஆர். ராதா, மனோகர்,
சாரதா, லட்சுமி, ராஜம்
மற்றும் பலர் நடித்த
அருணகிரிநாதர்

## ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ரஞ்சன்
நடித்த
ஷாஷி
(ஹிந்தி)

## REGAL—JAFFNA
NOW SHOWING
YUL BRYNNER
GEORGE CHAKIRIS
in
KINGS OF THE SUN
(Pannavision--de Luxecolor)

## மகாத்மா தியேட்டர்
(நெல்லியடி)
தினசரி 6-30 இரவு 9-30
SOPHIA LOREN
in
EL CID
(cinemascope color)

## நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஸ்ரீகாந் - ஜெயலலிதா
நடித்த
வெண்ணிற ஆடை


## கள்ள நாணயம் தயாரித்ததாக வழக்கு

மாவிட்டபுரம், திங்.

அச்சுவேலியைச் சேர்ந்த நாகலிங்கம் குணரத்தினம் என்பவர் சென்ற வருடம் ஏப்ரல் மாதம் இருபத்திமூன்றும் திகதி அச்சுவேலியில் சட்டவிரோதமாக ஐம்பதுசத நாணயங்களைத்தயாரித்ததாகவும், அவற்றை வைத்திருந்ததாகவும், கள்ள நாணயங்கள் தயாரிக்கும் உபகரணங்களை வைத்திருந்ததாகவும் எல்லாமாக மூன்று குற்றங்கள் சாட்டி, காங்கேசன்துறைப் பொலிசாரால் தொடரப்பட்டவழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் தொடர்ந்துஎடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி எதிரியை யாழ். மாவட்ட நீதிமன்ற விசாரணக்கு நிற்கும்படி உத்தரவிட்டு வழக்கை யாழ் மாவட்டநீதிமன்றத்திற்கு நேற்றுப் பாரப்படுத்தினார்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி ஆஜரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு வருடமாக தற்காலிகவேலைநீக்கம்

கொழும்பு, திங்கள்

347 உத்தியோகஸ்தர்கள் ஒரு வருடத்துக்கும் மேலாக தற்காலிக வேலைநீக்கத்திலிருந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் தாமதமாவதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமண அழைப்பு

சந்திரலிங்கம் - விமலநாயகி:

மாவிட்டபுரம் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. ச. நாகலிங்கம், திருமதி நாகலிங்கம் ஆகியோரது புதல்வன் திரு. நா. சந்திரலிங்கம் (கொழும்பு, தொழிற்பகுதி) அவர்களுக்கும், சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு ச. வைத்திலிங்கம், திருமதி வைத்தியலிங்கம் ஆகியோரது புதல்வி செல்வி விமலநாயகிக்கும் 1966 செப்டம்பர் 2-ம் நாள்வெள்ளிக்கிழமை காலை 9-40-10-28 மணிக்கு இடைப்பட்ட சுபவேளையில் திருமணச்சடங்குகள் சுதுமலை அம்மன் கோவிலில் இனிது நடைபெறும். நண்பர்கள், உறவினர் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள். தனிப்பட யாருக்கும் அழைப்பு அனுப்பப்படமாட்டா வென்பதை தயவுடன் அறியத்தருகிறோம். 1212

## திருமண அழைப்பு

திருநாவுக்கரசு-நாகபூரணம்:

சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்தகாலஞ்சென்ற திரு. க. வைத்திலிங்கம், திருமதி வைத்திலிங்கம் ஆகியோரது புதல்வன் திரு. வ. திருநாவுக்கரசு (மின்சாரப் பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்) அவர்களுக்கும், மாவிட்டபுரப் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. க. நாகலிங்கம் திருமதிநாகலிங்கம்ஆகியோரது ஏகபுதல்வி செல்வி நாகபூரணம் அவர்களுக்கும் 1966 செப்டம்பர் 2-ம்நாள் வெள்ளிக்கிழமைகாலை 9-40 மணிக்கும் 10-28 மணிக்கும் இடைப்படும் சுபவேளையில் திருமணச்சடங்குகள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இனிது நடைபெறும். நண்பர், உறவினர் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர் தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படா எனத் தயவாக அறியத்தருகிறேன். 1211

# நமது இலட்சியம் என்ன?

## ஹைகமிஷனர் சச்சார் விளக்கம்

மாவிட்டபுரம், திங்கள்

''வாழ்க்கையில் நமக்கு உள்ள இலட்சியத்தை அடையவேண்டுமெனில் ஐம்புலன்களை அவை வழியே செல்ல விடாது கட்டுப்படுத்திக்கொள்ள முயற்சிக்கவேண்டும்'' என்று இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பீம்சென் சச்சார் கும்பழாவளை? [illegible] சன்மார்க்கசபையின் விசேஷ பொதுக்கூட்டத்திற் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ச. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பீம்சென் சச்சார் பேசுகையில் கூறியதாவது:

''நமது தர்ம சாஸ்திரங்கள் இறைவன் ஒருவன் உளன் என்ற உண்மையைப் போதிக்கின்றன. நாம் தெய்வீகத்தன்மை யுள்ளவர்கள். ஆனால் இறைவனை விட்டு விலகியிருக்கின்றோம். நாம் உற்றார் உறவினரை விட்டுப் பிரிந்தாலும் மீண்டும் அவர்களை அடையவே விரும்புவது போல இறைவனிடமிருந்து வந்த நாம் மீண்டும் இறைவனை அடைய ஆசைப்படுவது இயல்பு.

எமது இலட்சியப் பாதையில் செல்லவிடாது பல நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடும், அவற்றை எல்லாம் சமாளித்து நமது வழியிற் செல்ல மனதைத் தைரியப்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் செய்யும் செயல்கள் யாவும் தர்மத்தின் வழிபட்டனவா என்பதனைச் சிறிது சிந்திக்கவேண்டும். உண்மை என்னும் ஒன்றினைக் கடைப்பிடிப்பதற்கு எந்தத் தியாகத்தையும் செய்யலாம்: எந்தவொரு சிறிய கருமமும் உண்மையின் அடிப்படையில் செய்யப்படுமானால் அது பலனளிப்பது உறுதி. தர்மத்தின் வழி நின்று எவ்வளவு திரவியத்தைத் தானும் தேடலாம். பொய்யான வழியில் சுவர்க்கலோகம் கிட்டுவதானாலும் கூட அதனால் எவ்வித பயனுமில்லை. இதனையே அண்ணல் மகாத்மா காந்திஜி தெளிவாகக் கூறினார். எந்தக் கொள்கையையும் சமயாசாரப்படி செய்ய நாம் தவறுவோமானால் நமது இலட்சியத்திலிருந்து தவறிவிடுவோம்.

இலங்கை மக்கள் மகாத்மா காந்திஜி பேரிலும் காந்தியத்திலும் வைத்துள்ள பற்று பாராட்டுதற்குரியது. காந்திஜியின் போதனைகள் இக்காலத்தவரால் நன்கு சிந்திக்கப்படவேண்டும். திரு. கே. இராஜகோபாலும் உரை நிகழ்த்தினார்.

திரு. எம். சபாரத்தினம் அனைவரையும் வரவேற்றார். சன்மார்க்க சபையினரால் வெளியீடு செய்யப்பட்ட இரு நூல்கள் கலாநிதி பீம்சென் சச்சருக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன.

## வாரசாரம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மசோதாமீது நடைபெற்ற விவாதத்தில் எதிர்க்கட்சியினர் மூன்று திருத்தப் பிரேரணைகளை கொண்டு வந்தனர். இத்திருத்தப் பிரேரணைகளை ஆதரித்தோ, எதிர்த்தோ வாக்களிக்க டாக்டர் நாகநாதன் மறுத்துவிட்டார். உணவு விவசாய மந்திரி திரு. எம். டி, பண்டாவும், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கோப்பாய் எம். பி. திரு, கதிரவேலுப்பிள்ளை, ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினமும் கேட்டும் டாக்டர் மசியவில்லை.

உயர் கல்வி மசோதா, ஜனப்பிரதிநிதிகள் சபையின் நிரந்தரக்குழுவின் பரிசிலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் கூட அதன் முக்கிய அம்சங்கள் மாற்றம் பெறவில்லை. குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதே 'கண்துடைப்பு' வேலை தானா என்ற ஐயம் எழுவதும் இயல்பு. நிரந்தரக் குழுவில் தங்கள் கட்சிக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப் படவில்லை என்று டாக்டர் நாகநாதன் சபையில் கூறியிருக்கிறார்.

டாக்டர் நாகநாதன் குறை கூறியதில் நியாயமிருக்கலாம். அவர் கட்சியில் உண்மை இருக்கலாம். ஆனால் அவைகளை பிரதமரிடமோ ஆளும் கட்சியிடமோ முதலில் எடுத்துக் கூறி நிவாரணம் தேடியிருக்கவேண்டும். அதுவே முறை. பிரதிநிதிகள் சபையில் திடீரென்று ஆளும் கட்சியின் ஒழுங்கு, கட்டுப்பாடுகளை மீறி நடந்து கொள்வது பண்பல்ல. இது வெறும் வாயை மெல்பவனுக்கு அவல் பொரி கிடைத்த மாதிரி எதிர்க்கட்சியினருக்கு ஆளும் கட்சியினரைப் பற்றி பிரசாரம் செய்யவும் வழி வகுக்கும். தேசிய ஐக்கியம் பேச்சில் மட்டுமல்ல, பொதுமக்களுக்கு மட்டுமல்ல அரசாங்கத்தில் உள்ளவர்களும் வழி காட்டவேண்டிய முக்கிய விஷயம்.

## அறிவித்தல்

இன்று மாலை சரியாக ஐந்து மணிதொடக்கம் யாழ். கோட்டை வெளியில், மக்கள் மறுமலர்ச்சிக் கட்சி ஏழாண்டுகளா ஆற்றிய பணியும்; அண்மையில் ஏற்பட்ட அரசியற் கட்சிகளும்; பற்றி அடுக்குமொழியில் ஆணித்தரமான கருத்துக்கள் அள்ளி வீசப்படும். எல்லோரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

வணக்கம்.

யாழ்ப்பாணத்திலுள்ள,

954 மக்கள் மறுமலர்ச்சிக் கட்சிக் கிளை

## நன்றி நவில்லல்

நாகம்மா-வல்லிபுரம் அ. அமிர்தலிங்கமும் (பா. உ.) காலஞ்சென்ற திருமதி நாகம்மா வல்லிபுரத்தின் குடும்பத்தினரும், அன்னாரது ஈமச் சடங்கில் கலந்து கொண்ட நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றனர். தனித்தனியே நன்றி செலுத்த முடியாமைக்கு தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

955 மூளாய், சுழிபுரம்.

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

சாவகச்சேரி, திங்கள்

நாவற்குழி கிழக்கு சனசமூகநிலைய 15வது ஆண்டு நிறைவுவிழாவும் புதிய கட்டிடத் திறப்புவிழாவும் இம்மாதம்31ந்திகதி நடைபெறவிருக்கிறது.

புதிய கட்டிடத்தை பரிஸ்டர் எம்.சிவானந்தம் அன்று மாலை 5மணிக்கு திறந்து வைப்பார். காந்தி சனசமூக நிலையமண்டபத்தில் நடைபெறும்இவ் விழாவிற்கு திரு வ.நடராசா தலைமை வகிப்பார்.

நாவற்குழி கிராமசபைத் தலைவர்திரு. க. தம்பிப்பிள்ளை, திருவாளர்கள் கே. டானியல், முன்னாள் செனட்டர் எஸ். நல்லையா, எஸ்.கே. தம்பிராசா, யோ. டொமினிக்ஜீவா, எம். சி. சுப்பிரமணியம், ஜனாப் எஸ். [illegible] ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

# நான்குவித வாசகர்களால் ஒரு நூல் வாசிக்கப்படுகிறது

## 'தண்டலை' வெளியீட்டு விழாவில் பேச்சு

இணுவில், திங்கள்

''ஓர் எழுத்தாளனின் நூல் நான்குவித வாசகர்களால் வாசிக்கப்படுகிறது. நூலில் எங்கே பிழை காணலாம் என்ற தீங்கான இச்சையோடு நூலைத் துருவிப் படிக்கும் பண்டித வாசகர்கள், இந்நூலில் என்னென்ன சிறப்புகள் இருக்கின்றன. எந்த அளவில் இது உலகுக்குப் பயன்தரும் என்ற அடிப்படையில் நோக்கும் நடுநிலைத் திறனாய்வு வாசகர்கள்பொழுது போக்கிற்காக நூலை எடுத்துப் பக்கங்களைப் புரட்டும் வாசகர்கள், தாமும் எழுத்தாளர்களாக பணிசெய்து கொண்டு இலக்கியப்பற்றுடன் வாசிக்கும் எழுத்தாள வாசகர்கள் என்றிப்படியுள்ள நான்குவித வாசகர்களுள் இலக்கிய வளர்ச்சிக்குத் தேவையான வாசகர்கள் யார் யாரென்பது சொல்லாமலேயே விளங்கும்.''

இவ்வாறு இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையில் நடைபெற்ற 'தண்டலை' நூல் வெளியீட்டுவிழாவில் பேசிய கவிஞர் அம்பி குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் தண்டலைநூலாசிரியரின் கவிதைகளில் உள்ள சிறப்புக்களாக-கருத்தாழம், உணர்ச்சிவேகம். இலட்சியத் துடிப்பு என்பவற்றை எடுத்துக் கூறினார்.

வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் விழாவுக்குத் தலைமை தாங்கினார். கவிஞர் இ. நாகராசன், வித்துவான் இ. திருநாவுக்கரசு, திருமதி க. குகனேஸ்வரி அம்மா, பண்டிதர் திரு. இ. இராசலிங்கம் ஆகியோரும் பேசினர்.

யாழ்ப்பாண மாநகரசபை என்ஜினியர் திரு. இ. வைத்திலிங்கம் நூலை வெளியிட்டு வைத்தார்.

திரு. செ. து. தெட்சணாமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. ச. வே. பஞ்சாட்சரம்நன்றிகூறினார்.

# பீஹார் வெள்ளம்: 30 லட்சம் மக்கள் பாதிப்பு

## 25-க்குமதிகமான கிராமங்கள் தீவுகளாகக்காட்சியளிக்கின்றன

பாட்னா, ஆக. 29

பீஹாரிலும் அஸாமிலும் வெள்ள நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. ஐந்து நதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் மொங்கியா பகுதியில் இருநூறு சதுர மைல் பரப்பு பாதிக்கப்பட்டுள்ளது. இருபத்தைந்துக்கும் அதிகமான கிராமங்கள் சிறுசிறு தீவாகக் காட்சியளிக்கின்றன.

பீஹாரில் ஏற்பட்டுள்ள மோசமான வெள்ளப் பெருக்கினால் முப்பதுலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பாட்னாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வெள்ள நிலைமையில் சிறிதும் மாற்றம் ஏற்படவில்லை என்றும் ஆனால் தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக இங்கு நடைபெற்று வருகின்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்ட மந்திரிகள், தங்கள் வாழ்க்கையில் முன்னர் எப்பொழுதுமே இப்படியான வெள்ளத்தைக் கண்டதில்லை என்று தெரிவித்துள்ளனர்.

## கூட்டாட்சியில். . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தது நியாயமற்றது என்றும் இது ஓர் அரசியல் விவகாரமென்றும் ஒருசாரார் தலைமைப்பீடம் நடந்து கொண்டவிதத்தை வன்மையாகக்கண்டித்தனர்.

தலைவர் திரு. விக்கிரமா பேசுகையில் ஜனவரி 8-ம் திகதியன்று வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டதன் காரணமாக தண்டிக்கப்பட்டவர்களது தண்டனைகள் வாபஸ்பெறப்பட வேண்டும் என்றும் இவ்விதம் வாபஸ் பெறப்படும்வரை தொடர்ந்து போராட்டம் நடத்துவதென்றும் தேவையெனில் தொழிற்சங்க ரீதியில் நடவடிக்கை எடுப்பதெனவும் கூறினார்.

11 தொழிற் சங்கங்களின் 15 கோரிக்கைகளையும் பெறுவதற்கும் தொடர்ந்து போராடுவதென மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

## வாளால் வெட்டிய வழக்கு

யாழ்ப்பாணம், செவ்வாய்

கொண்டாவிலைச் சேர்ந்த எஸ். தங்கலிங்கம், ஞானசேகரன் ஆகிய இருவரும் மயில்வாகனம் என்பவரை வாளால் வெட்டி படுகாயம் விளைவித்ததாக கோப்பாய் பொலிஸாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளை தலா 150 ரூபாய் பிணையில் செல்ல நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ராஜரத்தினம் அனுமதித்தார். எதிரிகள் சார்பில் புரக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார்.

## பார்லிமெண்டில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடங்களாகப் பிரித்து புனரமைத்தல். ஆசிரியர் நியமனங்கள் இடமாற்றம் பற்றிய விதிகள்; மாணவர்களுக்குக் கட்டாய,தொழில் மூலம் கல்வி. தேசியக் கல்வி நிதி ஒன்றினை நிறுவுதல்.

இப்புதியதிட்டங்களை அடுத்த வருடம் ஜனவரிக்கிடையில் அமுலாக்குவதற்குக் கல்விஇலாகா தயாராகிறது.

மெர்டேக்கா

## தெ. வியட்னும்வெற்றி

கோலாலம்பூர், ஆக. 29

இங்கு நடைபெற்ற மெர்டேக்கா உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தென் வியட்னும் வெற்றிபெற்றிருக்கிறது.

நேற்றிரவு தென்கொரியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற போட்டியில் இந்தியா வெற்றிபெற்று இச்சுற்றுப் போட்டியில் மூன்றுவது இடத்தைப் பிடித்துக் கொண்டது.

## தேவை

நெசவு வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. தங்குவதற்கு வசதியளிக்கப்படும். உடன் 217/1, கடையிற் சுவாமி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். 1102

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேல வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு [illegible] மாதம்30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org